# எதிரொலி
ETHIROLI
ஆஸ்திரேலியா

குரல் 05 அதிர்வு 53 நவம்பர் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162








Photo credit: www.7news.com.au

# தடுப்பூசிப் பாலத்தால் இணைக்கப்படும் உறவுகள்







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED
MASTER BUILDERS

எதிரொலி



# பொதி சுமக்கும் பரிகள்



சத்தியா நிரஞ்சன்

கார்த்திகை மாதத்தில் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமை மெல்பேர்ணில் விடுமுறை. அன்று விக்டோரிய ஓட்டப்பந்தய கழகம் (Victoria racing club) நடாத்தும், மனிதப் பொதியை சுமந்து - மெல்பேர்ண் பிலமிங்டன் பந்தய திடலில் (Flemington racecourse) வெற்றி கோட்டை நோக்கி பாயும் பரிகளின், நாட்டையே நிறுத்தி வைக்கும் ஓட்டப் பந்தயமே இந்த மெல்பேர்ண் கிண்ணம்.

வேகமாக ஓடும் மூன்று வயதுக்கு மேற்பட்ட குதிரை, அதிக நிறையுள்ள குதிரை, ஓட்டும் பணியாள் (Jockey) மற்றும் ஓட்டுநர் பொறிகளையும் (racing gear), சற்று வேகம் குறைந்து ஓடும் குதிரை குறைந்த மொத்த நிறையையும் சுமந்து ஓடுவதால், குதிரைகளுக்கிடையிலான கதியின் வேறுபாடு குறைக்கப்படுகிறது.

அதனாலேயே இது “ஊனை குதிரை பந்தயம்” (handicap horse racing) என அழைக்கப்படுகிறது. சாதாரணமாக பரி சுமக்கும் மொத்த பொதியின் நிறை சுமார் 50 இதற்கும் 57 கிலோவிற்குமிடையில் அமையும்.

ஆவணி மாதத்தின் முதல் வாரத்தில் பந்தயத்தில் பங்கு பெறும் குதிரைகளுக்கான விண்ணப்பப் பதிவு நிறைவுறும். முதலில் சுமார் 300 லிருந்து 400 வரையிலான குதிரைகள் பந்தயத்தில் பங்கு பெறுவதற்கு பதியப்படும். அதனைத் தொடர்ந்து குதிரையின் உரிமையாளருக்கு வழங்கப்படும். அவர், குதிரை சுமக்கும் பொதியின் நிறையை ஏற்பதாக சம்மதமும், அதற்கான பணத் தொகையையும் செலுத்த வேண்டும்.

கார்த்திகையில் நடக்கும் இறுதி போட்டியில் 3 ஆயிரத்து 200 மீற்றர் திடலில் 24 குதிரைகள் மட்டுமே வலம் வரும். போட்டியில் இருந்து வெளியேற்றப்படும் மீதி குதிரைகளுக்கு, சம்மதத்தின் போது வழங்கபட்ட பணம் உரிமையாளரிடம் மீண்டும் கையளிக்கப்படும். முன்னைய போட்டிகளில் குதிரைகள் ஈட்டிய வெற்றி பணம், சுமந்து ஓடிய நிறை போன்றவை இறுதி மெல்பேர்ண் கிண்ண போட்டியில் பங்குபெறுவதற்கான வாய்ப்பை நிர்ணயிக்கும்.

1861 ஆம் ஆண்டு முதன் முதலில் கைக்கடிகாரத்தை பரிசுப் பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மெல்பேர்ண் கிண்ணம், கடந்த மூன்று ஆண்டுகளாக மொத்தம் 8 மில்லியன் வெள்ளிகளை பங்கிடும் பரிசுத் தொகையாக கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

முதலாவது வெற்றி குதிரை உரிமையாளருக்கு 4.4 மில்லியன் வெள்ளிகளும், மிகுதி தொகை தொடர்ந்து வரும் 11 வெற்றி குதிரைகளின் உரிமையாளருக்கும் வழங்கப்படும். இதில் குதிரை ஓட்டும் பணியாளர் வெற்றி தொகையின் 5 சதவீதத்தையும், குதிரை பயிற்றுவிப்பாளர் 10 சதவீதத்தையும் பணப் பரிசாகப் பெறுவார்கள்.

1861 ஆம் ஆண்டு முதன் முதலில் கைக்கடிகாரத்தை பரிசுப் பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மெல்பேர்ண் கிண்ணம், கடந்த மூன்று ஆண்டுகளாக மொத்தம் 8 மில்லியன் வெள்ளிகளை பங்கிடும் பரிசுத் தொகையாக கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

முதலாவது வெற்றி குதிரை உரிமையாளருக்கு 4.4 மில்லியன் வெள்ளிகளும், மிகுதி தொகை தொடர்ந்து வரும் 11 வெற்றி குதிரைகளின் உரிமையாளருக்கும் வழங்கப்படும். இதில் குதிரை ஓட்டும் பணியாளர் வெற்றி தொகையின் 5 சதவீதத்தையும், குதிரை பயிற்றுவிப்பாளர் 10 சதவீதத்தையும் பணப் பரிசாகப் பெறுவார்கள்.




1864 இல் முதன் முதலில் வழங்கப்பட்ட வெற்றி கிண்ணம் முழுமையாக வெள்ளியினால் - இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது. ஆனால் இம்முறை போட்டியில் வழங்கப்பட்ட வெற்றி கிண்ணத்தின் பெறுமதி 250 ஆயிரம் வெள்ளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் குதிரைப் பந்தயத்தில் பங்கிடும் மொத்த பரிசு தொகையின் பெறுமதியில் உலகளாவிய ரீதியில் மெல்பேர்ண் கிண்ணம் நான்காவது இடத்தில் உள்ளது.

மெல்பேர்ணின் வசந்த காலத்தை மேலும் அழகுபடுத்துகின்ற வகையில் இந்த குதிரை பந்தயத்தினை காண வருகின்ற பார்வையாளர்களும், பந்தயக்காரர்களும் ஆடம்பரமாக ஆடை அணிகலன்களை கவரும் வகையில் அணிந்து வந்து கொண்டாடி மகிழ்வது ஆண்டுகாலமாக பேணப்பட்டு வரும் வழக்கு.

செவ்வாய் அன்று மதியம் மூன்று மணிக்கு, பிலமிங்டன் பந்தய திடலில் இடம்பெற்ற மெல்பேர்ண் கிண்ண பந்தயத்திற்கு முதல் வரும் சனியன்று இடம்பெறுகின்ற ஓட்டப்பந்தயம், விக்டோரியா டாபி (Victoria Derby) என்றும் மெல்பேர்ன் கப்பை தொடர்ந்து, வரும் வியாழனன்று நடக்கும் பந்தயம் விக்டோரியா ஓட்டப் பந்தய கழகத்தின் ஓக்ஸ் (Victoria racing club Oaks day) தினமெனவும் அழைக்கப்படும்.

இது குறிப்பாக பெண்களுக்கான தினமாக கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் மெல்பேர்ண்னில் கோவீல்ட் திடலிலும் (Caufield), முனிபள்ளத்தாக்கு திடலிலும் (Moonee Valley) மற்றும் விக்டோரியாவின் பல பாகங்களிலும் ஏராளமான குதிரைப் பந்தயங்கள் நிகழும். இதனாலேயே இவற்றை மெல்பேர்னின் வசந்தகால களிப்பாட்டம் (Spring Carnival) என்று அழைப்பார்கள்.

இந்த பந்தயங்களில் அவுஸ்திரேலியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் குதிரைகள் பங்குபெறுவது குறிப்பிடத்தக்கது. அண்மை காலங்களில் வெளிநாட்டு குதிரைகள் அதிக அளவில் பங்கு பற்றிய போதும், இந்த ஆண்டு அது மிகக் குறைவாகவே இருந்தன. விக்டோரியா ஓட்டப் பந்தய கழகத்தின் கடுமையான மருத்துவ பரிசோதனை விதிமுறைகளே இதற்கான காரணமாக கருதப்படுகிறது. 2013-2020 காலப்பகுதிக்குள் 7 குதிரைகள் ஓட்டப் பந்தயத்தின் பின் உயிரிழந்துள்ளன. அந்த ஏழு குதிரைகளும் வெளிநாட்டு குதிரைகள் என்பது குறிப்பிடத்தக்கது. நீண்ட தூரப்பயண அலைச்சல் மெல்பேர்ணின் சூழல் போன்றவை இக் குதிரைகள் காயப்பட்டு இறுதியில் உயிர் இழந்தமைக்கான காரணமாக கருதப்படுகிறது. கடந்த ஆண்டு சீரான மிருக வழிநடத்தலை விரும்பும் மக்கள் அமைப்பு (People for the Ethical Treatment of Animals) இந்தப் பந்தயத்திற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்ததுடன் “நாட்டை நிறுத்தும் அவலம்” எனவும் மெல்பேர்ண் கிண்ணத்தை குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஆண்டிலும் பல மிருக நலன்விரும்பிகள் தங்கள் எதிர்ப்பினை வெளிகாட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை பொது முடக்கத்தின் பின்னர் பத்தாயிரம் மக்களுக்கு மெல்பேர்ண் கிண்ணத்தை நேரில் கண்டு மகிழ அனுமதி வழங்கப்பட்டிருந்த வேளையில் மிக நேர்த்தியாக ஓடி “வெரி எலிகன்ட்” குதிரை (Very Elegant) 2021 மெல்பேர்ண் கிண்ணத்தை சுவீகரித்ததுள்ளது.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:05 அதிர்வு: 53 நவம்பர் 2021 தொ.பே:1800 960 162

# 'மதி' நுட்பத்துடன் சமராடுவோம்!

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில், நீதி நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்கும், நீடித்து நிலைக்கக்கூடிய – நிலையானதொரு அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கும் தமிழர்களுக்கு எஞ்சியுள்ள ஒரே ஆயுதம் 'ஒற்றுமை'யாகும். அணு ஆயுதத்தைவிடவும் பலம்பொருந்திய இந்த ஆயுதத்தை தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் வாழும் தமிழ் மக்களும், தமிழ்த் தலைமைகளும் தக்கவகையில் பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இன விடுதலைக்காகவும், உரிமைகளுக்காவும் அறவழி, மறவழி என உருமாறிய தமிழர்களின் போராட்ட வடிவம் இன்று இராஜதந்திர சமராக பரிணமித்துள்ளது. இந்த போரில் வெல்வதாக இருந்தால் எல்லாவற்றையும்விட மதிநுட்பம் அவசியம். பெரும் பலத்துடன் பொங்கியெழுந்து போராடுவதாலோ அல்லது அனல் பறக்கும் அறிவிப்புகளை விடுப்பதாலோ முன்னோக்கி நகரமுடியாது. மாறாக தக்க தருணம் பார்த்து தாக்குதல் நடத்த வேண்டும். அப்போதுதான் இலக்கை நோக்கி இலகுவில் நகரலாம்.

ஏன், எதற்காக தற்போது இது விடயம் சுட்டிக் காட்டப்படுகின்றது என்ற வினா உங்களுக்குள் எழலாம். அதற்கு பல காரணங்களை பட்டியலிடலாம். முக்கியமான சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

காட்டிக்கொடுப்பு, கைவிரிப்பு, கழுத்தறுப்புகளுக்கு மத்தியில் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை மௌனிக்க வைத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தென்னிலங்கை சிங்கள மக்களால் மீட்பராகவே பார்க்கப்படுகின்றார். அதேபோல அன்று பாதுகாப்புச்செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்சவும் 'போர் வெற்றி' நாயகனாகவே சிங்கள மக்களால் கருதப்படுகின்றார். இதனால்தான் அரசியல் அனுபவம் அற்ற அவருக்கு 69 லட்சம்பேர் வாக்களித்து அரியணை ஏற வைத்தனர். 'போர் வெற்றி' என்பதே அரசியல் களத்தில் ராஜபக்சக்களின் பிரதான முதலீடு. நெருக்கடியான சூழ்நிலைகளின்போது, சவால்களை சமாளிப்பதற்கும், மக்கள் ஆதரவை தக்கவைத்துக்கொள்வதற்கும் இதை வைத்தே கடந்த காலங்களில் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது ராஜபக்சக்கள் மீது மக்களுக்கு கடும் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. போர் வெற்றி நாயகர்கள் என்ற விம்பம் உடைய ஆரம்பித்துள்ளது. திரும்பும் திசையெல்லாம் விமர்சனக் கணைகள் தொடுக்கப்படுகின்றன. சிங்கள, பௌத்த மக்களே ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களின் கொடும்பாவிகளை எரிப்பதற்குகூட துணிந்துவிட்டனர். விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் என ஐம்பெரும் சக்திகளும் ராஜபக்சக்களுக்கு எதிராக திரும்பியுள்ளன. தேர்தலொன்று நடத்தப்படுமானால் அரசு படுதோல்வி அடையும் என்பதை ஆளுங்கட்சியினரே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி, மக்கள் எதிர்ப்பு உள்ளிட்டவற்றை சமாளிப்பதற்கான உரிய பொறிமுறை ஆளுந்தரப்பிடம் இல்லை. மறுபுறத்தில் சர்வதேச நெருக்கடிகளும், இராஜதந்திர பிரச்சினைகளும் அதிகரித்துவருகின்றன. இதனால் ஆட்சியாளர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர் என்பதே வெளிப்படை.

வழமையாக சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் ராஜபக்சக்களுக்கு எதிர்ப்புகள் வலுக்கும்போது, புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், போர்க்குற்ற விசாரணைக்கான அழுத்தம், ஜெனிவாக் கூட்டத்தொடர் உள்ளிட்டவற்றைக் காண்பித்து மக்கள் திட்டமிட்ட அடிப்படையில் திசைதிருப்பப்படுவார்கள். 'தேசப்பற்று' என்ற ஒற்றை வசனம்மூலம் எல்லாவற்றையும் சமாளித்துவிடுவர். புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட சில நகர்வுகளும் ராஜபக்சக்களுக்கு சார்பானவையாகவே மாறின என்பதே கசப்பான உண்மையாகும்.

புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்கள் தமிழர்களின் இராஜதந்திர சமருக்கு மிக முக்கியம். அவர்களின் அழுத்தங்கள், பங்களிப்புகள் தொடரவேண்டும். ஆனால் முன்னெடுக்கும் நகர்வுகளை தக்க தருணம் பார்த்து மதிநுட்பத்துடன் கையாள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ராஜபக்சக்களை இறுக்குவதற்கு புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைக்கூட அவர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளக்கூடும்.

ஜனாதிபதி கோட்டாமீது சிங்கள, பௌத்த மக்கள் கடுப்பில் உள்ள நிலையில், அவருக்கு எதிராக ஸ்கொட்லாந்தில் இடம்பெறும் போராட்டமானது, அவர் தொடர்பில் அம்மக்களின் மனங்களில் அனுதாப அலையை நிச்சயம் உருவாக்கும். மஹிந்த இத்தாலி சென்றிருந்தபோது இடம்பெற்ற போராட்டங்கள்கூட ஏதோவொரு விதத்தில் அவர்களுக்கு சாதகமாக அமைந்தன. இன்று ராஜபக்சக்களின் பங்காளிகள்கூட அரசிலிருந்து வெளியேறும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர். எனவே, தற்போதைய சூழ்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் உட்பட தமிழர்களால் முன்னெடுக்கப்படும் சில விடயங்களில் 'தந்திரோபாய பின்வாங்கலை' கடைப்பிடிப்பதே சிறப்பு. தென்னிலங்கையில் தானாகவே அரசியல் புயல் மையங்கொண்டுள்ளது. அது நிச்சயம் சூறாவளியாக மாறும். ஆனால் அதனை குழப்பி, சூறாவளியை ராஜபக்சக்களுக்கான தென்றல் காற்றாக மாற்றிவிடும் வகையில் தமிழர் தரப்பின் செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது.

# கம்பர்லாண்ட் கவுன்சில் தேர்தலில் களமிறங்கும் தமிழ் இளைஞர்!

மேற்கு சிட்னி பிராந்தியத்தில் அமைந்துள்ள கம்பர்லாண்ட் கவுன்சிலுக்கான தேர்தல் எதிவரும் டிசம்பர் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் கிறின் கட்சி சார்பான வேட்பாளர்களில் தமிழ் இளைஞரான சுஜனும் களமிறங்குகிறார்.

இந்நிலையில் அரசியல் களத்தில் தன்னுடைய வகிபாகம் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பில் சுஜன், எதிரொலியுடன் கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

**கேள்வி : வணக்கம், சுஜன், முதலில் உங்களைப் பற்றிய அறிமுகம்...?**

பதில் : வணக்கம் கோகுலன். எனது அப்பா 90 களின் நடுப்பகுதியில் அகதியாக ஆஸ்திரேலியா வந்திருந்தார். அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டளவில் நாம் அப்பாவுடன் இணைந்து கொண்டோம். எனது உயர்தரப்படிப்பையும் இங்கேயே தொடர்ந்திருந்தேன். அதன்பின்னர் இங்குள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து சமூகத்துடனான வேலைத்திட்டங்களில் இணைந்து கொண்டேன். அந்த வகையில் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டேன். செயற்பட்டுக்கொண்டிருக்கின்றேன்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நியுசவுத்வேல்ஸ் மாநில தேர்தலில் கிறின் கட்சி வேட்பாளராக களமிறங்குமாறு கட்சி வலியுறுத்தியது. இதன்படி 2014 ஆம் ஆண்டு வேட்பாளராக நின்றேன். அதன்பின்னர் 2019 ஆம் ஆண்டும் கவுன்சில் போட்டியிட்டேன். தற்போது அதே பகுதியில் வென்வேத் என்ற பகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளேன்.

**கேள்வி: ஏற்கனவே இரண்டு தடவைகள் கிரீன் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டுருக்கிறீர்கள். இரண்டிலும் முடிவு என்னவாக அமைந்தது? ஏன் மீண்டும் தேர்தலில் களமிறங்குகின்றீர்கள்?**

பதில்: இரண்டிலும் தோல்விதான் கண்டிருக்கின்றேன். இளைஞர்கள் தேர்தல் களத்திற்கு வர வேண்டும் என்பதே எனது நோக்கம். அதற்கு நான் ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்பதைச் செயலில் காண்பிக்கவே நான் தேர்தலில் நிற்கிறேன். அதைத் தாண்டிய சமூகம் சார்ந்த தேவைகளை நிறைவேற்றவும் விரும்புகிறேன்.

**கேள்வி: ஏன் கிரீன்கட்சிக்காகப் போட்டியிடுகிறீர்கள்?**

பதில்: கிரீன் கட்சியின் கொள்கைகள் எனது எண்ண ஓட்டத்திற்கு ஒத்துப் போகிறது. குறிப்பாக, மனித உரிமை, சமூக நல்லிணக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்ற காரணங்களினால் கிரீன்ஸ் கட்சியின் சார்பாக நிற்கிறேன்.

**கேள்வி: கம்பர்லாண்ட் கவுன்சில் மக்களின் முக்கிய பிரச்சனைகளாக நீங்கள் எதை நினைக்கிறீர்கள்?**

பதில்: கோவிட் காலத்தில் அதிகமாக தண்டப்பணம் விதித்த கவுன்சிலாக கம்பர்லாண்ட் காணப்படுகிறது. சிறந்த மற்றும் திறந்த வெளிப்படையான உள்ளூர் நிர்வாகம். சமூக அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் செயல்படுவதற்கான பொது இடங்களை உருவாக்குதல். அடக்கமான விலையில் வாழ்விடங்கள், அதாவது வீடுகளை உருவாக்குதல்.

**கேள்வி : கம்பர்லாண்ட் கவுன்சில் தொகுதியில் கிறின் கட்சிக்கான செல்வாக்கு எப்படியுள்ளது..?**

பதில்: 2019 ஆம் ஆண்டு தேர்தலில் தான் முதன் முதலில் கிறின் கட்சி இப்பகுதியில் தேர்தலில் களம் கண்டது. இம்முறை இரண்டாவது தடவை. இந்த காலப்பகுதியில் மக்களிடம் சென்றிருக்கிறோம். மக்கள் மத்தியில் வேலை செய்திருக்கின்றோம்.

**கேள்வி: தேர்தலில் வெற்றி பெற்று என்ன வேலைத்திட்டங்களை முதலில் செய்வதாக எண்ணியுள்ளீர்கள்?**

பதில்: சிறு வணிகர்களுக்கு கவுன்சில் ஊடாக எவ்வாறான திட்டங்களை வழங்க முடியுமோ அவற்றை இலகுவாக வழங்குவதற்கான நடைமுறைகளை பரிசீலிப்பேன். அது மட்டுமின்றி இந்த கவுன்சில் பகுதியில் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும். சமூக அமைப்புகளுக்கான இடவசதிகள் இன்மை அதனை நிறைவு செய்யவேண்டும்.



அத்துடன், தைப்பொங்கல் தினத்தை மையமாக வைத்து தை மரபு திங்கள் என்று தைமாதத்தை பிரகடனப்படுத்தியமைப்போல எனது கவுன்சிலுக்குள் ஒரு தீர்மானத்தை கொண்டு வருவேன்.

சிலவேளை நான் தோற்றுப்போனால் லேபர் கட்சியுடன் பேச்சு நடத்தி அதற்கு முழு முயற்சி எடுப்பேன்.

அதுமட்டுமின்றி, பொது அமைப்புக்கள் மற்றும் ஒரு சில வர்த்தக நிறுவனங்களுக்கும் வழங்கப் பட்டுக்கொண்டிருந்த 750 ஆயிரம் டொலர் மானியத்தை நிறுத்திவிட்டார்கள். அதனை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

**கேள்வி: மக்களிடம் சொல்ல விருப்பப்படும் விடயம்..?**

பதில்: கிறின் கட்சிக்கு அளிக்கும் வாக்குகளால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை என்று எண்ணாதீர்கள். சிட்னியில் லேபரும் லிபரலும் தான் வெல்லப்போவது என்ற மனநிலையோட்டத்தை மாற்ற வேண்டும். மெல்பேர்ண் மற்றும் கன்பராவை எடுத்துப்பாருங்கள், மக்கள் கிறின் கட்சியை தேர்வு செய்து கொண்டிருக்கிறனர். இளையோர்களில் அதிகமானோர் கிறின் கட்சியை சார்ந்தே செயற்பட்டுவருகின்றனர். மாநிலம் தழுவி கிறின் கட்சிக்கான மாற்றம் நிகழும். அதேவேளை இந்த கவுன்சில் பகுதியில் தமிழர் ஒருவரின் குரல் ஒலிக்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் சார்ந்து தொடர்ந்து செயற்படுவேன் என்பதையும் தெரிவித்து உங்களின் வாக்குகளை எனக்களியுங்கள் என்றும் கோரி நிற்கின்றேன். நன்றி.



# சரிகிறது ராஜபக்சக்களின் சாம்ராஜ்ஜியம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசுக்குள், அரசியல் நெருக்கடி தாண்டவமாடுகிறது. அரச தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், பங்காளிக்கட்சிகளுக்குமிடையில் 'சொற்போர்' உக்கிரமடைந்துள்ளது. மறுபுறத்தில் மொட்டு அணிக்கு நேசக்கரம் நீட்டிய தேசியவாத அமைப்புகளும் கடும் சீற்றத்தில் உள்ளன.

இதனால் விரைவில் தெற்கு அரசியல் களத்தில் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் தரமான - சிறப்பான அரசியல் சம்பவங்கள் அரங்கேறக்கூடும். அதற்கான ஏற்பாடுகள் தற்போது திரைமறைவில் இடம்பெற்றுவருகின்றன. அரசியல் களத்திலும் இது தொடர்பில் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டுவருகின்றன.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம், உரப்பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்களால் மொட்டு கட்சிக்கும், பங்காளிகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த உள்ளக மோதல், 'யுகதனவி' விவகாரத்தையடுத்து முச்சந்திவரை வந்துள்ளது. இரு தரப்புகளுமே சரமாரியாக விமர்சனக் கணைகளை தொடுத்துக்கொள்கின்றன.

குறிப்பாக அமைச்சு பதவிக்காக மனசாட்சியை அடகுவைக்க முடியாது, நாட்டுக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு தயார் என பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும், அரசுக்குள் இருந்துகொண்டு சுகபோகங்களை அனுபவித்தபடியே குறைகூறுவதைவிடவும், அமைச்சு பதவிகளை துறந்துவிட்டு வெளியில் சென்று விமர்சியுங்கள் என மொட்டு கட்சி உறுப்பினர்களும் கடும் சீற்றத்துடன் அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர். நாளாந்தம் பலவிதமான அறிவிப்புகளும், அறிக்கைகளும் வெளிவருகின்றன. இதனால் இலங்கையில் தெற்கு அரசியல் களம் கொதிநிலையிலேயே காணப்படுகின்றது.

### புதிய அரசியல் கூட்டணி உதயம்?

அரச கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள சில சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு அரசிலிருந்து வெளியேறுவதற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 40 பேர் தயாராகிவருகின்றனர் எனவும், இதற்கான பேச்சுகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன எனவும் அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

இவ்வாறு வெளியேறும் உறுப்பினர்கள் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பவே முற்படுவார்கள் எனவும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சம்பிக்க ரணவக்கவின் '43' எனும் இயக்கம் ஆகியவற்றுடன் இணைந்து பயணிப்பதற்கு அவர்கள் பச்சைக்கொடி காட்டப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

அந்தவகையில் புதியதொரு அரசியல் கூட்டணி கட்டியெழுப்படும் எனவும், இதற்கு முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமை தாங்கக்கூடும் எனவும், மைத்திரிபால சிறிசேன உட்பட மேலும் சில முக்கிய பதவிகளை வகிக்கக்கூடும் எனவும் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பாக பேசப்படுகின்றது.

வரவு - செலவுத்திட்ட கூட்டத்தொடர் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், 40 பேர் வெளியேறுவார்கள் என்ற செய்தி மொட்டு கட்சிக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஏனெனில் வெளியேற்றம் இடம்பெறும் பட்சத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை மட்டுமல்ல சாதாரண பெரும்பான்மையைக்கூட இழக்க நேரிடும்.

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவானது, கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் போட்டியிட்டது.
அக்கட்சி 17 போனஸ் ஆசனங்கள் உட்பட 145 ஆசனங்களைப் பெற்றது.

பொதுத்தேர்தலில் தனித்து போட்டியிட்டிருந்தாலும், தேர்தலின் பின்னர் ஈபிடிபி, தேசிய காங்கிரஸ், எமது மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியன மொட்டு அரசுக்கு ஆதரவு வழங்கின. சில மாவட்டங்களில் மட்டும் தனித்து போட்டியிட்ட சுதந்திரக்கட்சி, யாழ். மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. இதன்பிரகாரம் 151 ஆசனங்கள்
(அதாவது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்) அக்கட்சி சகிதம் மொட்டு கட்சி ஆட்சி அமைத்தது.

**அரச கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள சில சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு அரசிலிருந்து வெளியேறுவதற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 40 பேர் தயாராகிவருகின்றனர் எனவும், இதற்கான பேச்சுகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன எனவும் அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.**

அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் தனித்து போட்டியிட்ட முஸ்லிம் தேசிய கூட்டணியும் (ஒரு ஆசனம்) அரசுக்கு ஆதரவு வழங்கிவருகின்றது. எதிரணியில் இருந்தாலும் முக்கியமான சட்டமூலங்கள் வரும்போது ரிஷாட் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அரசுக்கு ஆதரவாக வாக்களித்துவருகின்றன. (இரு கட்சிகளின் தலைவர்களைத்தவிர ஏனைய எம்.பிக்கள் ஆதரவளிக்கின்றனர்)

ஆக நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக 158 பேர் செயற்படுகின்றனர். எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவதென்பது இதுவரையில் அரசுக்கு சவாலுக்குரிய விடயமாக இருக்கவில்லை.

எனினும், ஆளுங்கட்சி பக்கம் (எதிர்தரப்பு ஆதரவு இல்லாமல்) 151 ஆசனங்கள் உள்ள நிலையில், 40 பேர் அல்லது அதற்கு மேலானவர்கள் வெளியேறிவிட்டால் அரசு சாதாரணப் பெரும்பான்மையைகூட (113) இழந்துவிடும். அவ்வாறு நடைபெற்றால் பட்ஜட்டைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாமல்போகும். சிலவேளை முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்கள் மற்றும் எதிரணியிலுள்ளவர்கள்
வாய்ப்பளித்தால் அரசுக்கான பெரும்பான்மை உறுதிப்படுத்தப்படும். எது எப்படி இருந்தாலும் சாதாரண பெரும்பான்மையை தக்கவைக்க கடுமையாக போராடவேண்டிய நிலைமையே எதிர்காலத்தில் அரசுக்கு ஏற்படக்கூடும்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுவிட்டோம் என சூளுரைத்த மொட்டு கட்சி, 'யுகதனவி' விவகாரத்தால் ஏற்கனவே மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை இழந்துள்ள நிலையில், தற்போது சாதாரண பெரும்பான்மைக்கும் சவால் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசியலில் உடனடி ஆட்சி மாற்றத்துக்கு சாத்தியமில்லை என்றே அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். புதிதாக ஆட்சியில் அமர தற்போதைய சூழ்நிலையில் எவரும் விருப்பம் கொள்ளமாட்டார்கள். அடுத்து தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் தற்போதைய ஆளுந்தரப்புக்கு பெரும் பின்னடைவு ஏற்படும். பங்காளிகள் தனிவழிக்கு தயாராவதற்கு இதுவும் ஓர் பிரதான காரணி எனலாம்.

ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள மக்களுக்கு சலுகைகளை வாரி வழங்கினால் பொருளாதார பிரச்சினை உக்கிரமாகும். ஆக மொத்தத்தில் தற்போதைய சூழ்நிலையில் கோட்டா அரசுக்கு இடியப்ப சிக்கல் ஏற்பட்டுள்ளது

Fish & Meat Cart
Online Home Delivery

# YOU STAY SAFE AT HOME
# WE DELIVER

FRESH HIGH QUALITY FISH & MEAT

HYGIENICALLY CLEANED & CUT TO YOUR SIZE NEEDS

0431-102-334
SCAN THIS CODE
TO START A WHATSAPP CHAT WITH US

Fish And Meat Cart
WhatsApp business account

SOURCED FROM LOCAL SEAFOOD MARKETS & BUTCHERS



PRE-ORDER ONLY
ORDER BY 12 PM
FOR SAME DAY DELIVERY



ONLINE SHOP COMING SOON
WWW.FISHMEAT.COM.AU

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
நவம்பர் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

# மாவீரர் வார சிறப்பிதழ்





# மாவீரரை கருவிலும் மனதிலும் சுமந்த பெற்றோரின் கண்ணீர் துளிகள்...

● **அதிசய நிலவன்**

வரலாறு எங்கே திரும்பும்? எங்கே முறியும் என்று தெரியாது. ஆனால், அது தன்னுடைய பயணத்தில் தொடர்ந்து புதிர்களை விட்டுச் சென்று கொண்டேயிருக்கும். அடுத்து என்ன நடக்கும், நாளை எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள முடியாத பயணி அது. மேடு,பள்ளம், கல்லு, முள்ளு, வெளி, பாலை, கடல் என எல்லாவற்றிலும் ஏறி இறங்கி நுழைந்து வெளியேறிச் செல்லும் மாய நதியாக ஓயாது பயணித்துக்கொண்டிருக்கிறது. ஒருபோது அளவற்ற மகிழ்ச்சியைத் தந்து கொண்டாட்டமாகச் செல்லும் வரலாறு திடீரென இரத்தம் சிந்துவதாக மாறிவிடுகிறது. இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக மலர்களைப் பரப்பி விடும். கொந்தளித்துக் கொண்டிருக்கும் வரலாறு இன்னொருபோது மிகச் சாதுவாகி அமைதியாகும்.

தமிழீழப்போராட்டத்தின் வரலாறும் அப்படித்தான். தொடங்கிய இடமும் அதன் பயணப்பாதையும் ஒன்று. முடிவிடமும் அதன் பின்னான கதியும் வேறொன்றாக இருக்கிறது. இப்பொழுது கனவும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சிதைந்த வெளியில் நம்மை அநாதரவாக விட்டுச் சென்று விட்டது. இந்த அநாதரவான நிலையானது எதையும் தீர்மானிக்க முடியாதவர்களான நிலையில் நம்மைத் தள்ளி விட்டிருக்கிறது. இதற்கொரு எளிய உதாரணம், 2009 க்கு முன்பு மாவீரர் நாளை எழுச்சியாகக் கடைப் பிடிக்கக் கூடியதாக இருந்தது. போராட்டத்திலே தம்மை ஈய்ந்த வீரர்களுக்கான மதிப்பை மக்கள் சுதந்திரமாக அளித்தனர். அவர்களை நினைவு கூர்ந்தனர். 2009 க்குப் பின்னர் இந்த நிலை அப்படியே மாறி விட்டது. மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டிருந்தன. அந்த இடங்களில் படையினரே நிலை கொண்டிருந்தனர். இதனால் மாவீரை மதிப்பளிக்கவோ நினைவு கூரவோ முடியாத நிலை ஏற்பட்டது. தமக்குள் மக்கள் குமுறி வெடித்தனர். வேறு வழியில்லையே. இன்றும் இதுதான் நிலை.

போரின் தோல்வி ஏற்படுத்திய விளைவிது. தமிழர் தரப்பு போரிலே வெற்றியீட்டியிருந்தால் இது எப்படியிருந்திருக்கும்? என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். இதனால்தான் வரலாறு எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி மாறும்? மாற்றங்களை உண்டாக்கும் என்று சொல்லவே முடியாது என்கிறோம். அது சதி செய்யுமா நம்மை மடியிலேந்திப் பாராட்டுமா என்று அறுதியிடவே முடியாது.

ஈழப்போராட்டம் மகத்தானதொரு விடுதலையை நமக்குத் தரும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. அந்த நம்பிக்கையில் பல்லாயிரக்கணக்கானோர் அலையலையாக எழுந்து போராட்டத்தில் இணைந்து கொண்டனர். அப்படி இணைந்து கொண்டவர்கள், போராட்டத்திற்கெனத் தம்மை முழுமையாகவே அர்ப்பணித்தனர். இது சாதாரண தன்மைக்கு மாறான ஒரு அசாதாரணமான நிலையாகும். ஏனென்றால் உடலையும் உள்ளத்தையும் உயிரையும் பொது இலட்சியத்துக்கென முழுமையாக அர்ப்பணிப்பது என்பது இலகுவானதல்ல. அது சாதாரணமானதும் அல்ல. சாதாரண மனதினால் இதைக் கற்பனை கூடச் செய்ய முடியாது. இந்த அசாதாரணமான அர்ப்பணிப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்தும் போராளிகளாக எழுந்து வந்து கொண்டிருந்தனர். இந்த உணர்வு எதனால் ஏற்பட்டது? விடுதலை என்ற மகத்தான கனவினால்தானே! சுதந்திர தாகத்தின்பாற்பட்டது தானே!

உலகிலேயே ஒப்பற்றது சுதந்திரம். அதற்காக உலகெங்கும் பல கோடிப் பேர் தம்மை அர்ப்பணித்துத் தங்கள் உயிரை ஈய்ந்திருக்கிறார்கள். சுதந்திரத்துக்காக உழைப்பதும் தம்முயிரை ஈகம் செய்வதுமே உலக அளவில் ஒப்பற்ற தியாகமாகக் கொள்ளப்படுகிறது. தேசங்கள் தங்களுடைய மகத்தான வீரர்களாகக் கொண்டாடுவதும் மதிப்பதும் நாட்டுக்காக, விடுதலைக்காகத் தம்மை ஈகம் செய்தவர்களையும் போராடியவர்களையுமே. தேசங்கள் மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட மக்களும் தமது விடுதலைக்காகப் போராடிய போராளிகளைப் போற்றுகின்றனர். வழிபடுகின்றனர்.

தமிழர் வரலாற்றிலும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த வீர வழிபாடு இருந்திருக்கிறது. தம்மைக் காத்தவர்களுக்கு நடுகல் நட்டு அவர்களை வழிபட்டிருக்கின்றனர் என்று சங்ககாலப் பாடல்கள் கூறுகின்றன. காலம் மாறினாலும் இந்தப் பண்பாட்டுத் தொடர்ச்சி அறாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. காரணம், மனிதர்களுக்கு எப்போதும் தேவையாக இருக்கும் விடுதலை உணர்வே. அந்த விடுதலை உணர்வைத் தமது நெஞ்சிலே கனலாக ஏந்தி, சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். மரியாதை வணக்கம் செலுத்துவது தமது கடமை என்று மக்கள் எண்ணுகின்றனர். இதனையே கடந்த காலத்தில் எமது மண்ணிலும் மாவீரர் நாளில் அவர்கள் செய்து வந்தனர். ஆனால் 2009 க்குப் பின்னர் இதற்கான சூழல் முற்றாகவே மறுக்கப்பட்டு வந்தது. இலங்கை அரசு தமிழ் மக்களுடைய விடுதலை உணர்வுக்கும் நினைவு கூருதலுக்கும் முற்றாகவே தடைவிதித்தது.

2015 க்குப் பின்னர் இடையில் இரண்டு மூன்று ஆண்டுகள் மெல்லிய தளர்வு ஏற்பட்டு பெரும்பாலான துயிலுமில்லங்களில் மக்கள் வழிபாடுகளைச் செய்தனர். அப்பொழுது அங்கே கல்லறைகள் எவையும் இருக்கவில்லை. அவற்றையெல்லாம் படையினர் அழித்துவிட்டனர். இருந்தாலும் சிதைந்த கற்களைக் கூட்டியள்ளி ஒரு பொதுச் சின்னத்தை அங்கங்கே உருவாக்கினார்கள். அதற்கு முன்பாகக் கூடி நின்று சுடரேற்றி அந்தச் சுடரிலே தங்கள் மாவீரச் செல்வங்களின் திருமுகங்களைக் கண்டனர். அந்த முகங்களை நினைவிற் காணும்போது அவர்களுடைய நெஞ்சு உருகியது. அந்த நெஞ்சுருகிய நெய்யிலிருந்தே தீபங்கள் ஒளிர்ந்தன. காலப்போக்கில் இந்த நிலை மாறி மீண்டும் துயிலுமில்லங்கள் செம்மையாக்கம் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்த நிலை நீடிக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. யார் இந்த நினைவு கூருதலுக்கு தலைமை தாங்குவது? யார் உரிமை கோருவது என்று நம்முடைய தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள்ளே முண்டியடித்து எதிர்த்தரப்புக்கு தடைக்கான வாய்ப்புகளைக் கொடுத்தனர். அதோடு மக்களின் மனதிலும் கசப்புகளை உருவாக்கினார்கள். அரசாங்கம் தன்னுடைய கடும்போக்கு அரசியலை முன்னெடுத்து, எல்லா நெகிழ்வுகளுக்கும் தடையைப் போட்டது.

இதனால் இந்த ஆண்டும் (2021) மாவீரர் நாள் வழிபாடுகளும் நினைவு கூருதல்களும் கேள்வி நிலையிலேயே உள்ளன. இதைக்குறித்து வெளிப்படையாக அரசாங்கத்துடன் எந்தத்தமிழ் அரசியற் கட்சியும் தலைவர்களும் பேசவில்லை. பாராளுமன்றத்தில் செய்யப்படும் விவாதங்களில் பலவும் பேரளவில் பதிவு செய்யப்படுகின்றனவே தவிர, அவை செயற்பாட்டுத் தன்மைக்கு வருவது குறைவு. ஆகவே பாராமன்றத்துக்கு வெளியிலும் வேறு வகையில் இந்த விடயத்தைத் தமிழ் அரசியலாளர்கள் கையாள வேண்டும். அது சிலவேளை பெரிய வாய்ப்புகளைக் கூட உருவாக்கக் கூடும். ஆனால் தற்போதுள்ள கோட்டபாயவின் கடும்போக்கு அரசாங்கத்தில் இதை நம்பிக்கையோடு எதிர்பார்க்க முடியாது. அதுவும் தமக்கு எதிராகப் போராடியவர்களை - போர் செய்தவர்களை எப்படி அங்கீகரிப்பது என்ற மனக்குழப்பத்திற்குள் சிக்கியிருக்கும் ஜனாதிபதியும் படைத்தரப்பும் இதற்கு இணங்கி வருவர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. சில வேளை வெளியுலக அழுத்தங்கள் இதற்கான தளர்வை - கண்டும் காணாமல் விடுவதை செய்யக் கூடும்.

ஆனால், இதுவரையில் மாவீரர் நாளைக் குறித்து திருப்திகரமான எந்த அறிவிப்புகளும் தமிழர் தலைமைகளிலிருந்து வரவும் இல்லை. அரசாங்கத்திடமிருந்து வரவுமில்லை. ஒரு மந்த நிலையே காணப்படுகிறது. இந்தச் சூழலில் இதைக்குறித்து மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த சிலரிடம் பேசினோம். முக்கியமாக மாவீரர்களின் பெற்றோருடன். அந்தப் பதிவுகள் கீழே -

**(IIIஆம் பக்கம் பார்க்க)**

# மாவீரரை கருவிலும் மனதிலும் சுமந்த பெற்றோரின் கண்ணீர் துளிகள்...



(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

### அ. சுப்பையா (பரந்தன்)

“இந்த வருசம் எப்பிடி மாவீரர்நாள் நடக்கும் எண்டு தெரியேல்ல. ரெண்டு வருசமாக அப்படித்தானே இருக்கு. சனங்கள் தங்களுக்குத் தெரிஞ்ச அளவுக்கு எங்கேயோ போய் விளக்கைக் கொழுத்தி நினைவைச் செய்யினம். வீடுகளிலதான் அநேகமான ஆக்கள் போன வருசம் விளக்கேற்றினவை. நாங்களும் வீட்டிலதான் விளக்கேற்றினம். எனக்கும் வயசாகீட்டுது. இப்ப 86 நடக்குது. சரியாக நடக்க மாட்டன். இதயக் கோளாறு எண்டு பைப் வைச்சிருக்கு. இந்த நிலைமையில நடக்கிற அமளிக்குள்ள போய் என்னால தாக்குப்பிடிக்கேலாது. மனசில பாரந்தான். என்ன செய்யிறது.

ஏதோ முடிஞ்ச அளவுக்கு பிள்ளைக்கு ஒரு விளக்கை, அவன்ர நினைவோட ஏத்தினாச் சரியெண்டு நினைக்கிறன். இதை விட என்னால என்ன செய்யேலும்? மற்றப் பிள்ளையளுக்கு, அதான் அவன்ர சகோதரங்களுக்கு உள்ளுக்குள்ள கவலை. ஆனால் அவங்கள்தான் என்ன செய்யிறது. ஏற்கனவே ரெண்டு பெடியள் பட்ட கஸ்ரம் கொஞ்சமில்லை. ஒருத்தன் இந்தப் பிரச்சினையில (போராட்டத்தில) பத்து வருசமாக இந்தியாவில பிடி பட்டு படாத பாடெல்லாம் பட்டான். அவனைக் காப்பாற்றிறதுக்கெண்டு நாங்கள் பட்டபாடு கொஞ்ச மில்லை. செலவளிச்ச காசும் கொஞ்சமில்லை. எல்லாம் முடிஞ்சு அவன் வெளியால வந்து இப்பதான் ஒரு கலியாணத்தைக் கட்டி, ஒரு தொழிலைப் பிடிச்சு ஏதோ தன்ரை பாட்டைப் பாக்கிறான். இதுக்குள்ள இந்த மாவீரர்நாள் அது இது எண்டு ஏதாவது செய்யப்போய் சிக்குப்பட்டால் மீதிக்காலத்தையும் பாழாக்கினதாப் போயிடும். ஆனாலும் மனசுக்குள்ள தம்பியாற்றை நினைவு கிடந்து கொதிக்கும்தானே. இவனைப்போலத்தான் இன்னொருத்தனும் சண்டையில நிண்டு காயப்பட்டுத் தப்பிப் பிழைச்சிருக்கிறான். இப்ப எல்லாம் முடிஞ்சுது. ஆனால் ஒண்டும் நடக்கேல்ல. செத்துப் போனவனுக்குக் கூட ஒரு விளக்கை ஏத்த முடியேல்ல எண்ட நிலைமை. இதுக்கு நாங்கள் தனிய என்ன செய்யேலும்? ஊருக்கு ஒத்ததுதானே எங்களுக்கும். இப்ப பாருங்க, இதுவரையிலயும் (2021 ஒக்ரோபர் 30 வரை) அதைப்பற்றி (மாவீரர் நாளைப் பற்றி) ஆரும் கதைக்கிற மாதிரியுமில்லை. இதுக்கொரு தீர்வைக் காணுறதுக்கு இப்ப ஆர்தான் இருக்கினம்? இதுக்குத்தான் ஒரு வழியைக் காணுறதுக்கு ஆரால ஏலும்? சும்மா அவனவன் வந்து தங்களைப் பற்றித்தான் கதைப்பான். இப்ப பாருங்கோ, சண்டை முடிஞ்சு (போர் முடிந்து) 12, 13 வரிசமாகுது. இதுவரையில இதுக்கொரு ஏற்பாட்டைக் கண்டு பிடிச்சிருக்கலாமெல்லோ. நாங்கள் என்ன சண்டைக்கே நிக்கிறம்? ம்!”

### கந்தையா சின்னம்மா (பளை)

“எங்களுக்கு அழுகையும் துன்பமும்தானா எப்பவும்? முந்திப்பிள்ளைகளை இழந்த கவலை. ஒண்டுக்குப் பின்னாக ஒண்டாக மூண்டு பிள்ளையளைக் குடுத்தன். சின்னக் கண்ணன், பெரிய கண்ணன் எண்டு அடுத்தடுத்து அண்ணன் தம்பிகளாக போனாங்கள். போன மூண்டு பிள்ளையளும் திரும்பேல்லை. மிஞ்சின ஒரே ஆறுதல் ஏதோ இந்த மண்ணுக்கு, எங்கட உரிமைக்காக போயிருக்கிறான்கள் எண்டுதான் இருந்தது. கவலை எண்டாலும் கொஞ்சம் மனசை ஆத்தக் கூடியதாக இருந்துது. இயக்கம் (விடுதலைப்புலிகள்) இருக்கேக்க வீரச்சாவடைந்த பிள்ளையளுக்கெண்டு மாவீர்நாளைக் கொண்டாடிச்சுது. அது ஒரு ஆறுதல். எனக்கு மட்டுமில்லை. என்னைப் போல ஆயிரம் சனங்கள் - தாய்மார் எல்லாம் வந்து தங்கட பிள்ளைகளுக்கெண்டு ஒண்டா நிண்டு விளக்கேற்றக்க பிள்ளையளை நேரில பாக்கிறமாதிரி ஒரு நிம்மதி. எல்லாருக்கும் இது ஒரு விதியெண்டமாதிரி ஆறுதலடைவம். அப்பவும் கவலைதான். ஆனால் அதுக்குள்ள ஒரு ஆறுதலிருந்தது. பெடியளோட கூட நிண்ட பெடியளும் தளபதிமாரும் வந்து நிக்கேக்க நாங்கள் தனிச்சுப் போகேல்ல. இதுவும் எங்கட பிள்ளையள் எண்டொரு எண்ணம் வரும். அடுத்த முறை மாவீரர்நாளுக்கு அதில கொஞ்சத்துக்கு விளக்கேத்த வேண்டியிருக்கும். அதுகளும் மாவீரர் ஆகியிருக்குங்கள். அதுவும் கவலைதான். ஆனால் இதெல்லாம் அதுகளுக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். எல்லாம் ஏதோ ஒரு பெரிய நன்மைக்குத்தான் நடக்குது எண்டிருந்தம். மாவீரர் நாள் எண்டால் உடம்பெல்லாம் சிலிர்க்கிற மாதிரி ஒரு எண்ணம் வரும். உண்மையாத்தான் சொல்லிறன், கோயில்களில கொடியேறித் திருவிழா நடக்குமெல்லே, அது மாதிரி ஒரு உணர்வுதான் முந்தி மாவீரர் வாரம் தொடங்கிறது எண்டோடண எனக்கு வரும். பெடியளும் பிள்ளையளும் எண்டு போராளிகள் எங்கட வீட்டுக்கு வரத் தொடங்கீடுங்கள். வாற பிள்ளையளுக்கு தேத்தண்ணி, சாப்பாடு, உடுப்பெண்டு எதையாவது குடுத்தால் அதுகளுக்கும் சந்தோசம். எங்களுக்கும் ஒரு ஆறுதலாயிருக்கும். ஒரு கிழமை பத்து நாளாக மாவீரர் நாள் ஏற்பாடும் கொண்டாட்டமும்தான். அப்ப நாங்கள் ஒரு பெரிய சொந்தத்தோட இருக்கிறமாதிரி இருக்கும். இப்ப எல்லாம் போச்சுது. தனிச்சுப் போய் செத்துப்போன மாதிரி இருக்கிறம். ஆரும் வாறதுமில்லை. போறதுமில்லை. இந்த மண்ணுக்காக தங்களக் குடுத்த பிள்ளைகளை நினைச்சு ஒரு விளக்கை ஏத்தக் கூட விதியில்ல. இதுகளை நினைக்க நினைக்க இன்னும் கவலை கூடுது. நாடுதான் கிடைக்கேல்ல. அதுகள் நினைச்சதும் நடக்கேல்லை எண்டால் ஒரு நினைவுக்கு விளக்கை ஏத்தினாலாவது கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். இந்த வருசம் அதுக்கு வாய்ப்பிருக்கும் எண்டு தெரியேல்ல. இப்பிடி இவங்கள் சனங்களைத் தடுக்கத் தடுக்க அதுகளின்ர மனசிலதான் நெருப்பெரியும். நாங்கள் பேசாமல் எங்கட வீட்டில விளைக்கை ஏற்றிறது எண்டு நினைச்சிருக்கிறம். போன வருசமும் அப்பிடித்தான் செய்தம். ஊரில எல்லாற்ற வீட்டிலையும் அண்டைக்கு விளக்கேத்தோணும். இவை என்ன செய்வினம்? உலகம் முழுக்க இருக்கிற தமிழாக்கள் அப்பிடித்தான் செய்யினமானம். அது நல்லதுதான். இவன்களுக்கு அதுதான் சரியான பாடமாயிருக்கும்!”

### மாயாண்டி கறுப்பாயி (முல்லைத்தீவு)

“ஏங்தம்பி, இந்தக் கொடுமையைப் பற்றி என்னத்தச் சொல்றது. இப்பத்தான் இயக்கமே இல்லயே. பிறவு ஏன் இவனுகளுக்கு இம்புட்டுப் பயம்? பேசாம ஒரு நாளைக்குத்தான எண்டு மாவீரர் நாளைக் கொண்டாட விட்டுற வேண்டியதானே! எதுக்கு அங்கன துயிலுமில்லத்துக் காணீல குந்திக்கிட்டிருக்கணும்? இது வம்பு செய்யிற மாதிரிதானே இருக்கு. நாங்க அந்தப் பக்கமா போறப்பல்லாம் திரும்பித் துயிலுமில்லத்தப்பாத்தா, வயித்தில நெருப்பு எரியும். அதெல்லாம் எருக்கலம் பத்தையாக் கெடுக்கு. அதுக்கு அந்தப் பக்கமா பச்சைக் கூடாரத்தப் போட்டுக்கிட்டு காட்டோரமா உக்காந்திருக்கிறாங்க? எதுக்கு அப்பிடி இருக்கணும்? செத்தவன்லாம் மறுபடி எழுந்து வந்திடுவானா? எதுக்கு இப்புட்டுப் பயம்? இப்ப பாருங்க வருசத்துக்கு ஒருக்காத்தான மாவீரர் நாள் வரும். அதை விட நம்மட பிள்ளைகள்ட பிறந்த நாள், வீரச்சாவடைந்த நாளுக்கெல்லாம் போயி அந்தக் கல்லறையில நாலு பூவை வெச்சு படையலயும் வெச்சு அழுதிட்டு வருவம்க. ஆனாலும் மனசில ஆறுதலாயிருக்கும். இப்ப மனசில பாரம்தான் ஏறிருக்கு. மனுசன் எறக்க முடியாத பாரத்தோட வாழமுடியுமா? இந்த வருசம் எங்கட வீட்டிலயும் பக்கத்தில இருக்கிற நம்மட கோயில்லயும்தான் விளக்கு வைக்கப்போறம். என்ன செய்யிறாங்கன்னு பாப்பொம். பாருங்க, பிள்ளைங்கள்ட படத்தைக் கூட பயந்துகிட்டுதான் வெச்சிருக்க முடியுது. பெத்த பிள்ளைகள்ட படத்தைக் கூட வெச்சிருக்கு முடியாதிருந்தா எப்பிடியிருக்கும்னு ஒருத்தடவை நெனெச்சுப் பாருங்க! ”

ஆம், மாவீர்நாளை நினைவு கூரவே முடியாத சூழல்தான் நாட்டில் காணப்படுகிறது. அரசாங்கம் அதற்கு அனுமதிக்கப்போவதில்லை. அடக்குமுறையாளர்களிடம் வேறு எந்த நீதியையும் நெகிழ்ச்சிகளையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இதை மறுக்க மறுக்க மக்களுடைய மனதில் நெருப்பெரியத் தொடங்கும். அதையே ஒவ்வொரு மாவீரர் பெற்றோரின் கண்ணீரும் கனலும் இதயங்களும் சொல்கின்றன.

இறந்தோரை நினைவு கூருவதென்பது உள ஆறுதலை அளிப்பது. அதை நினைவு கொள்வது அந்த மக்களுடைய வாழும் உரிமைகளில் ஒன்றாகும். இதை மறுப்பது ஒடுக்குமுறையின் கொடூர நடவடிக்கையே.

போரின் தோல்வி உண்டாக்கும் விளைவுகள் மிகப் பயங்கரமானவை என்பது சாதாரணமானதல்ல. அது நம்மை இல்லை என்றாக்கி விடும். இல்லை என்பது எதுவும் நமக்கில்லை என்பதுவே. நமக்குக் காட்டப்படும் கருணையும் அனுதாபமும் அவமானத்தைத் தருவதாகவே அமையும்.

ஒரு கௌரவமான - மதிப்பு மிக்க வாழ்க்கைக்கு, விடுதலைக்காக - போராடிய மக்கள் இன்று அடைந்திருக்கின்ற இடம்? இந்தத் துயர நிலை என்று மாறும்? என்று நம் வாழ்வில் ஒளியேறும்?

# மாவீரர் துயிலும் இல்லங்கள்

**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.



# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?

இதுவரை காலமும் எமது புனித இலட்சியமானதமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒருநாளில்வைப்பதால்எல்லோரும்அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களிலும், வாசலிலும் மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



**"மாவீரர்**
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்



**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி, ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும் சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்
### ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

● எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது

● அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.



# இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!

● **கவல்கணன்**

ஆஸ்திரேலியாவின் வட கோடியில், தற்போது நகரமாகியிருக்கும் டார்வினிலிருந்து சுமார் 400 கிலோ மீட்டர் தூரத்தில், தென் கிழக்கு திசை நோக்கிய ஒரு இடம் தான் வீமோல். அங்கே முறின்பத்தா என்ற மொழி பேசும் பூர்வீக குடிமகன் ஒருவன் வாழ்ந்து வந்த இடத்திற்கு அருகிலிருந்த ஆறு வற்றிப் போகிறது. அவனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது அவன் பொறுப்பு. அந்த ஆறு வற்றிப் போனதால் அவன் தயவில் வாழும் ஆறு பேருக்கும் உணவு தேடி அந்த இடத்தை விட்டுக் கிளம்புகிறான். ஒரு 'லொங்கூத்பார்' கிடைத்தால் அனைவருக்கும் நல்ல விருந்து போடலாம் என நினைத்து, காட்டுப் பக்கம் செல்கிறான். 'லொங்கூத்பார்'என்பது அவன்மொழியில் - எமக்குப் புரிய வேண்டுமென்றால் - கங்காரு.

வரட்சி காரணமாக, அவன் சென்ற இடமெங்கும் ஏமாற்றம்தான். வேட்டைக்குச் சென்ற அவனுக்கு முப்பதைத் தாண்டாத வயது. இருந்தாலும், அவனது உடல் சோர்வடையத் தொடங்கியது. உணவின்றி ஒரு மனிதன் முப்பது நாட்கள் உயிர் வாழலாம், ஆனால் நீரின்றி மூன்று நாட்களுக்குமேல்வாழமுடியாதாமே? அவனுக்கு அது தெரியுமா தெரியவில்லை. நாவறண்டு போகிறது. கொண்டுவந்த வளரியை ஒரு பக்கம் வைத்தான். ஒரு புதர் அருகில் சாய்ந்தான். அப்படியே உறங்கிப் போனான்.

அவன் வீட்டிலோ, பசியுடன் மனைவி. குழந்தைகள். வழமையாக வந்து போகும் உறவினர்களும் வரக்காணோம். எல்லோர் வீட்டிலும் அதே பிரச்சனைதான். வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது அவனது மனைவிக்கு. ஆனால், அவளே அழுதால், அவள் குழந்தைகளை யார் தேற்றுவது? மனம் மட்டுமல்ல, உடலும் சோர்ந்து போக அப்படியே அவளும் உறங்கிப் போனாள்.

> **ஆஸ்திரேலியப்பூர்வீகமக்களிடையே இருந்த ஒரு பழக்கம் - யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம்.**

தூங்கிக் கொண்டிருந்தவனை யாரோ கூர்ந்து பார்ப்பதைப் போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. மூடிய கண்களைத்திறக்காமலே, எங்கே இருக்கிறோம் என்பதை மீள நினைவு கூர்ந்தான். ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே இருந்த ஒரு பழக்கம் - யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம். ஆனால், இவனைக் கொல்வதற்கு யாரிடமும் எந்தக் காரணமும் இல்லை. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தால், அவன் எதிரே ஒரு லொங்கூத்பார். சற்றும் தயக்கமில்லாமல், ஒரு கையால் தனது வளரியைப் பற்றிக் கொண்டான், அவன் குடும்பத்திற்கு உணவாகப் போகிற லொங்கூத்பார் நோக்கி சட்டென விட்டெறிந்தான். விட்டெறிந்த வளரி அதன் மேல் மோதி, நேராய் நின்ற அந்த விலங்கை நெடுஞ்சாணாகப் படுக்க வைத்தது. அதனை நோக்கி ஓட நினைத்தவனுக்கு நெஞ்சை அடைத்தது. தொப்பென்று கீழே விழுந்தவனுக்கு மூச்சு நின்றுவிட்டது.

மாரடைப்பு!

அது ஒரு மரணம். இல்லை இரண்டு மரணங்கள். உணவு தேடி வந்தவனும், உண-



வாகிப் போக இருந்ததும் பலியாகி அந்த இடத்திலேயே இரண்டு மரணங்கள்.

அடுத்தநாள், அவனது இளைய சகோதரன், வேட்டைக்கு சென்ற தனது அண்ணன் ஏதாவது கொண்டு வந்திருக்கிறானா என்று பார்க்க அவனது குடும்பம் தங்கியிருக்கும்இடத்திற்குச்செல்கிறான். மூன்று நாட்களாக அவன் திரும்பவில்லை என்று அறிந்ததும், அவனது மூத்த மகனையும் அழைத்துக் கொண்டு அண்ணனை தேடி செல்கிறான். அவனது காலடித் தடயங்களை நான்கு கண்களும் கூர்மையாக அவதானித்துப் பயணித்து, அந்த மரணங்கள் நிகழ்ந்த இடத்தில் போய் நிற்கின்றன.

அவன் கடைசியாகப் பார்த்தது ஒரு கங்காரு. அதனால், அவனது ஆத்மாவும் கங்காருவாக மாறியிருக்கும் என்று மகனும் தம்பியும் முடிவெடுக்கிறார்கள். அந்த இடத்தை ஒருவன் காவல் செய்ய, மற்றவன் வீட்டாரிடம் சொல்வதற்காக ஓடிச் செல்கிறான்.

பசியால் கதறியழ முடியாமல் தவித்த அவன் மனைவி, ஓவென்று ஒப்பாரி செய்கிறாள்.

அயலவர், உறவினர் அனைவருமாக அவன் இறந்திருக்கும் இடம் நோக்கி ஊர்வலமாக செல்கின்றனர்.

இறந்த கங்காரு இப்போது அவர்களுக்கு இரையாக தயாராகிறது. இறந்தவன் உடல் மண்ணுக்கு இரையாக தயாராகிறது.

அவனது இரண்டு கால் பெருவிரல்களும் இணைத்துக் கட்டப்படுகின்றன. அவனது உடல் தரையில் படுக்கவைக்கப்பட்டு, அவன் கைகள் உடல் மேல் வைக்கப்படுகின்றன. அவனது மனைவி, அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அவனை எப்படி முதலில் சந்தித்தாள், அவன் அவளுக்கு என்னவெல்லாம் செய்து கொடுத்தான் என்று தனக்குள்ளும் மற்றவர்களுக்குக் கேட்கும்படியாகவும் குரலை ஏற்றியும் இறக்கியும் பாடுகிறாள்.

அவன் உடல் மேல் மண் தூவப்பட்டு, அதன் மேல் மரச்சுள்ளிகள் பரப்பப்படுகின்றன. அவர்களது இனக்குழுவின் பெரியவர் அவன் அருகே வந்து, அவன் எப்படி இறந்தான் என்று மூன்று முறை கேட்கிறார். யாரோ ஏதோ பதில் சொல்ல அதை இவரும் கேட்பது போல் கேட்கிறார். அவனது மனைவி மற்றும் அவனுக்கு சொந்தமான பொருட்கள் யாரிடம் செல்ல வேண்டும் எனக் கேட்கிறார்.



(IX **ஆம் பக்கம் பார்க்க**)

# இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!



பூர்வீக மக்களின் வாழ்க்கைக் குத் துணைபோகும் இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத் தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடி யேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனித இடங்களா கக் கருதப்படுகின்றன.

ஆஸ்திரேலியமண்ணில்மட்டு மல்ல,காலனித்துவஆட்சிநடை பெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீக மக்கள்வஞ்சிக்கப்பட்டுள் ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவஆட்சிநடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ் வாறு வஞ்சிக்கப்படுள்ளன.

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி உட்பட, அவை அனைத்தும் அவனது இரண்டாவது சகோதரனிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று அவரே பகிரங்கமாக அறிவிக்கிறார். ஒப்பாரியும் முணுமுணுப்புகளும் தொடர்கின்றன.

அப்போது, ஒரு கூரான கல்லை எடுத்து அவன் மனைவி தன் தலையிலுள்ள நீண்ட முடிகளைவெட்டிக்கொள்கிறாள். செம்மண்ணைக் கையிலெடுத்து தன் முகத்திலும், தலையிலும் பூசிக்கொள்கிறாள். அவன் மனைவியும், வேறு பெண்கள் சிலரும் அவனது உடலை சுற்றி வலம் வந்தபடியே ஒப்பாரி போல் பாடியவண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் கைகளில் இரண்டு தடித்த சிறு கோல்கள். அவற்றைத் தாளத்துடன் தட்டியபடியே அவன் உடலை சுற்றி வருகிறார்கள். அவனது இரண்டாவது சகோதரன், கங்காருவைப் போல நடமாடுகிறான்.

பசியாக இருந்த அனைவரும் பரிமாறப்பட்ட கங்காருவை ஒரு வழி செய்து விடுகிறார்கள். மீதம் ஏதுமில்லை.

இரண்டு காலங்கள் மாறி, மழை மீண்டும் வரும் வரைக்கும் இவன் பெயரை யாரும் சொல்லக்கூடாது, அப்படி சொன்னால் இறந்தவன் ஆத்மா அந்த இடத்திலேயே சுற்றித்திரியும் என்று அந்தப் பெரியவர் கூறி, ஏற்கனவே கொண்டுவரப்பட்ட ஒரு கல்லை சுட்டிக்காட்டி, அவனது மூத்த மகனை அழைக்கிறார். அவனைக் கொண்டு, இறந்தவன் தலைப்பகுதியில், செங்குத்தாக அந்தக் கல்லை நட வைக்கிறார்.

அவன்மனைவி, அவன்குழந்தைகள்மட்டுமல்ல, அவன் நண்பர்களும் ஏதாவது காரியத்தை புதிதாக செய்ய ஆரம்பிக்குமுன்னர், அந்த 'நடுகல்' இருக்கும் இடத்திற்கு வந்து, ஆசி பெற்றுச்செல்வார்கள்.

இந்தப் பழக்கம் ஆஸ்திரேலிய பூர்வீக மக்கள் பலரிடம் காணப்பட்டதை அவர்களது வாய் வழி கதைகள் மட்டுமல்ல, பூர்வீக மக்களின் வாழ்க்கையை ஆவணப்படுத்திய ஆங்கிலேயர்களும்பதிவு செய்துள்ளார்கள்.

இந்த சம்பவம் நடந்து மூன்று நான்கு தலைமுறைகள் கடந்திருந்தாலும், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு இந்தக் கதை சந்ததி சந்ததியாக சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களைப்போல அல்லாது, உள் நாட்டில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தங்கள் கலாச்சார விழுமியங்களை ஓரளவு தக்க வைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கிறது.

'அனைத்தும்மற்றையதுடன்தொடர்புடையது' - என்பது பூர்வீக மக்களின் நம்பிக்கைகளின் ஒன்று. நாம் காணும் உலகம், நாம் உணரும் உலகம், எமது கண்களுக்குத் தெரியும் உயிரினங்கள், சடப்பொருட்கள் எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையகவே இருக்கின்றன. இந்த தொடர்புகளை சந்ததி சந்ததியாக எடுத்துச்சொல்வதற்குத்தான் கதைகள், ஓவியங்கள், சடங்குகள் என்பவற்றையும் பூர்வீக மக்கள், குழப்பங்களில்ஒழுங்கையும், ஒழுங்கில்நிலையாண்மை





மற்றும் தாக்குப்பிடித்தல் என்பவற்றையும் கண்டு, வாழ்வுக்கான சட்டங்களைத் தீட்டினார்கள்.

இப்படியான தொடர்புகளை அவர்கள் உணர்ந்திருந்தாலும் மற்றைய சமூகங்களில் வளர்ந்திருப்பது போல ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றுதான் இறந்தவர்களை வழிபடவேண்டும் என்பது அவர்களது முறையல்ல. அவர்கள் தங்கள் முன்னோர்களை வணங்கினார்கள். அந்த வழிபாட்டிற்கு என்று சிறப்பாக ஒரு கட்டிடம் இல்லாவிட்டாலும், முன்னர் குறிப்பிட்ட நடுகற்களை வணக்கத்திற்குரிய இடங்களாக அவர்களுக்கு இருந்திருக்கின்றன. ஐரோப்பியர்கள், குறிப்பாகப் பிரித்தானியர்கள் அந்த வழிபாட்டு முறையை முற்றாக அழிப்பதற்கு முயற்சிகள் செய்துள்ளார்கள்.

இதேவேளை, சில இடங்கள் புனித இடங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ஆஸ்திரேலிய சின்னமாகியுள்ள உளுறு மலை.

பொதுவாகப் பார்த்தால், பூர்வீக மக்களின்வாழ்க்கைக்குத் துணைபோகும் இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத்தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடியேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனிதஇடங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றில் மக்கள் ஒன்று கூடி சடங்குகளை நிகழ்த்துவதுதான், மற்றைய சமூகத்தினரின் வழிபாட்டு முறையுடன் ஒப்பிடக்கூடியது.

பூர்வீக மக்களின் இன்னொரு நம்பிக்கை, அவர்கள் வாழும் நிலத்தின்மேல், அவர்கள் உரிமை கொள்ளமுடியாது என்பதாகும். ஆனால், இது குறித்த புரிந்துணர்வே இல்லாத பிரித்தானியர்கள் இந்த பூர்வீக மக்கள் வாழும் நாட்டில் காலடி வைத்தால் என்னவாகும் என்பதை சரித்திரம் நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது.

ஆஸ்திரேலிய மண்ணில் மட்டுமல்ல, காலனித்துவ ஆட்சி நடைபெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீக மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவ ஆட்சி நடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ்வாறு வஞ்சிக்கப்படுள்ளன.

ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே காணப்பட்ட நடுகல் வழிபாடு, தமிழர்களிடையேயும் பரவலாக இருந்திருக்கிறது.

"என்னைமுன்நில்லன்மின்தெவ்விர்பலரென்னை,

முன்நின்று கல்நின் றவர்" - என்ற திருக்குறள் மட்டுமின்றி சங்க இலக்கியத்தின் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் பரந்து காணப்படும் பாடல்களில் நடுகல் வழி-பாடு குறித்து கூறப்பட்டிருக்கின்றன.

அந்தவகையில்,தமிழர் நிலத்தில் உரிமைகள் பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து நின்று மாய்ந்தவர்கள் விதைக்கப்பட்ட இடத்தில்அமைக்கப்பட்ட நடுகற்கள்இந்த கார்த்திகை மாதத்தில் நினைவு கூரப்படுகிறது. அவர்களது நினைவாக அமைக்கப்பட்ட நடுகற்கள் வேண்டுமென்றே பல இடங்களில் தகர்த்தெறியப்பட்டாலும் நினைவுகளில் எரிகின்ற அணையா சுடராக அவர்கள் வழிபடப்படுகிறார்கள்.

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



“பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே”

“இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது”

**- 1989**

“இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்”

**- 1990**

“நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாக-வோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்”

**- 1991**

“எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்”

**- 1992**

“எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது”

**- 1993**

“சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்”

**- 1994**

“யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது”

**- 1995**

“மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை”

**- 1996**

“மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்”

**- 1997**

“எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப்போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது”

**- 1998**

“போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ‘ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது”

**- 1999**

“எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்” **- 2000**

“விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்”

**- 2001**

“தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. ‘உயர் பாதுகாப்பு வலயங்கள்’ என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன”

**- 2002**

“எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன”

**- 2003**

“சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை”

**-2004**

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனை-கதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்”

**-2005**

“சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடு-களையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்”

**-2006**

“எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமா-கத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்”

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்” **-2008**



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் “தகனம் செய்வது” தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

எதிரொலி

நவம்பர் 2021

# பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே பெரிய வேறுபாடில்லை

அறுவடை முடித்த வயல்கள்
வெறிச்சோடின
ஒரு சிறங்கை மணிகூடக் கிட்டவில்லை
நமக்கு.

காற்று அடித்ததுதான்
எடுத்துத் தூற்றவில்லையே எம் நெற்சூடு.

மழை பெய்தது
எம் தாமரைக்குளத்துக்கு மட்டும்
தண்ணீர் வரவில்லை.

வெளி வீதி சுற்றி
காவடி தோளிருந்து இறங்கும்
நேரம் வந்தாச்சா?

வலிக்கிறது தோள்மூட்டு
வரமேதும் கிட்டவில்லையே நமக்கு.

ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை
இளிச்சவாயர் ஆனோமா?

பூ மலரும் வடிவு பார்க்க
வாசலிருந்தோம் நம்பிக்கையுடன்.

பூவும் மலரவில்லை
பூ மரத்தின் வேரும் தெரியவில்லை.

நிலவு பார்க்கும் ஆசையில்
இரவெல்லாம் விழித்திருந்தோம்.

நிலவையும் காணவில்லை
விழித்திருந்த இரவையும் காணவில்லை.

பத்து நாள் அலங்காரத்திருவிழா
முற்றுப்பெறுகின்றது.
எஞ்சியிருப்பது கொடியிறக்கம் மட்டுமே.

சிகரங்கள் இறங்குகின்றன.
சின்னமேளங்கள் போய்விட்டன.
தவில்காரரும் புறப்படுகின்றனர்.

காப்புக்கடைகளைக் கலைத்து
கட்டத்தொடங்கியாயிற்று.
சில கடலைக்காரரே மீதி.

இனி அவர்களும் போய்விடுவார்கள்.

எல்லோரும் போகலாம்.
கோவில் வீதிக்குடியிருப்பாளர்கள்
எங்கே போவது?

ஜிகினா வெளிச்சத்தில் குதித்த
அலுப்புத்தீர
ஒரு பகல் உறங்கலாம்
அதன்பிறகு என்ன?

வேள்வி நடத்த கோயிலில்
அலங்கார உற்சவத்துக்கு ஆசைப்பட்டோம்
நடந்தது என்ன?

கூத்து நடந்தது பார்த்துப்
பரவசமடைந்தோம்.
இப்போ கூத்தும் முடிந்துவிட்டது.
எந்த வாழ்வும் கிட்டவில்லயே எமக்கு.

எங்கேனும் சின்னக்கிளைகளில்
அரும்பு கட்டத்தொடங்கினால் போதுமே
ஆதிக்க மாடுகள் அதனை
மேய்ந்துவிடுகின்றன.

அழகிய ஜீவிதத்திற்காக
சின்னக் கூடு கட்டுவோமென
சிட்டுக்குருவிகள் சுள்ளி பொறுக்கினாற்கூட
பருந்துகள் பொறுத்துக்கொள்வதில்லை.
குருவிகளை அடித்து வாயிற் போடுகின்றன.

நம் வயலின் விதைப்புக்கு நாமுழுதாற்கூட
அண்டை வயற்காரன் சண்டைக்கு
வருகின்றான்.

ஈழத்தமிழருக்கு
இது எழுதிவைத்த விதியாச்சு.

எட்டு மூலைப்பட்டம் கட்டி
இரவிலேற்றினோம்.
விடியும்வரை விண்சத்தம் கேட்டது.
பட்டத்தைத்தான் எவரும் பார்க்க
முடியவில்லை.

சப்த நதிகளும் கூடி



அட்ட திக்கு யானைகளும் கூடி
ஊரையடித்து உலையிற்போடும்
பகாசுரர்களும் கூடி
எமக்கு பந்தி பரிமாற வந்தனர்.
பாயாசம் என்றனர்.

வாழையிலை விரித்து வரிசையிலிருந்தோம்
என்ன விழுந்தது இலையில்?

ஆக்கித் தந்ததும் ஒன்றுமில்லை.
தூக்குச் சட்டியிலும் ஒன்றுமில்லை.

மின்சாரம் வந்தது,
எரிசாராயம் வந்தது,
டயலொக் வந்தது,
மொபிற்றல் வந்தது,
அங்கர் பட்டரும்
மக்கி நூடில்சும் வந்தது,

பிதாமகன் வந்தான்,

போய்சும் வந்தார்கள்
எமக்கான விடுதலைதான் வரவில்லை.

வீதியெங்கும் விளம்பரப் பலகையும்
காதிலெங்கும் சமாதானப் பாடலுமாய்
விளங்குகின்றன நம் ஊர்கள்.

ஈழத்தமிழனே!
பட்டும் பட்டும் உனக்கேனடா புத்தி
வரவில்லை.

ஒன்றில் போராடு
இல்லையேல் சரணாகதி அடைந்துவிடு.
இரண்டுக்குமிடையில் நின்று
நசிந்து விடாதே.

உன் தாகத்துக்கு நிறைவான தண்ணீரை
எவரும் தரமாட்டார்கள்.
வாய் நனைக்க மட்டுமே வார்ப்பார்கள்.
நீ சொண்டைத்தான் நக்க வேண்டி வரும்.

பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே
பெரிய வேறுபாடுகளில்லை
ஒன்று கடிக்கும்
மற்றது அடிக்கும்.

எதிரே வருபவன் பலவானென்றால்
இரண்டுமே ஒன்றாகிவிடும்.

எரிகிற கூரையில் கொள்ளியெடுத்து
சுருட்டுப் பற்றவைத்தானாம்
கிழவனொருவன்.
பக்கத்து வீட்டுக்காரனின் கதைதான்.
எமக்குப் பழைய கதையாச்சே.

உலகெங்கும் டெங்குக் காய்ச்சலாம்
அவரொருவர் நுளம்புநாசினி விசுறுகின்றார்.

இறுதியில் நுளம்பு இங்குதானென்று
மகாபிரபு மருந்துடனும் வரலாம்..

வருபவர்கள் எல்லோரும் வரட்டும்.
முதலில் நீ முதுகிற் கூனலில்லாமல்
முற்றத்தில் நில்

உடுக்கடித்து ஆடப் பழகு.
தலையில் தலைப்பாகை கட்டு.
நறுக்குத் தெறித்தாற் போல
உன் வாயிலிருந்து வார்த்தைகள் வரட்டும்.

நீ திரும்பினால்
திசைகளும் உன்னோடு திரும்பட்டும்.

நீ பாடினால்
பட்ட மரத்திற்கூடப் பால் தெறிக்கட்டும்.

மழையுன் தோளின் கீழேயே
பெய்யும்படியாய்
தலையை முகிலுக்கு மேலே வைத்திரு.

இத்தனைபேரையும் குழியில் விதைத்தது
தேர்தலில் நிற்க அல்ல.

தெருக்களைச் செப்பனிட அல்ல.
மாகாண சபையின் நிர்வாகமெடுத்து
மதவு கட்ட அல்ல.

வேண்டும் எமக்கு கூண்டில்லா வாழ்வு.
வேண்டும் எமக்கு விடுதலைக்கான சிறகு.

– **புதுவை இரத்தினதுரை**

# தமிழின் மிக முக்கிய ஆவணம் ஜெய் பீம்!



அ.முத்துக்கிருஷ்ணன்

கடலூர் மாவட்டம் விருதாச்சலத்தை அடுத்த கம்மாபுரம் ஒன்றியத்தில் உள்ள முதனை கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜாக்கண்ணு. 1993-ஆம் ஆண்டு ஒரு திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ராஜாக்கண்ணு காவல்துறையால் லாக் அப்பில் அடைத்து வைக்கப்படுகிறார். சில தினங்களில் அவர் லாக் அப்பில் வைத்தே அடித்து கொலை செய்யப்படுகின்றார்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கம்மாபுரம் முன்னாள் ஒன்றிய செயலாளர் ராஜா மோகன் மூலமாக ராஜாக்கண்ணுவின் மனைவில் பார்வதி வழக்கறிஞர் சந்துருவை சந்திக்கிறார். இருளர் - பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ராஜாக்கண்ணு கொலை வழக்கில் ஆஜராகி ஒரு தொடர் போராட்டத்தின் வழியே நீதி பெற்றுத் தருகிறார் வழக்கறிஞர் கே.சந்துரு. ராஜாக்கண்ணு குறிப்பிட்ட அந்த திருட்டு நிகழ்வில் தொடர்பில்லாதவர் என்பதும் விசாரணையில் தெரியவருகிறது. இந்த கொலையுடன் தொடர்புடைய காவல்துறையினர் உள்ளிட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது.

வழக்கறிஞராகவும் பின்னர் நீதிபதியாகவும் அறியப்பட்ட கே.சந்துரு, எடுத்து நடத்திய இந்த வழக்கும், இருளர்கள் இன்றும் சதிக்கும் கொடூர வாழ்வும் தான் 'ஜெய் பீம்' என்கிற திரைப்படமாக மலர்ந்திருக்கிறது.

1993-ஆம் ஆண்டு நடந்த சம்பவத்தை மணிகண்டனும், லிஜோ மோல் ஜோஸ/ம் மீண்டும் நம்முன் உயிர்ப்புடன் நிகழ்த்திக் காட்டியிருக்கின்றனர். பிரகாஷ்ராஜ், ரஜிஷா விஜயன், ராவ் ரமேஷ், குரு சோமசுந்தரம், இளவரசு, பாஸ்கர், பவா செல்லத்துரை, குமரவேல், காளிஸ்வரன், பிரகதீஸ்வரன் ஆகியோர் முக்கிய கதா பாத்திரங்களில் கதையை உயிர்ப்பித்திருக்கிறார்கள். வழக்கறிஞர் சந்துருவாக நடித்திருக்கும் நடிகர் சூர்யாவின் வாழ்வில் ஜெய் பீம் ஒரு அறிய பொக்கிஷமாக மிளிர்கிறது. அவர் சந்துருவாக நடிக்கவில்லை. மனப்பூர்வமாகவே வாழ்ந்திருக்கிறார். எஸ். ஆர்.கதிரின் ஒளிப்பதிவும் ஷான் ரோல்டனின் இசையும் திரைபடத்திற்கு கூடுதல் பலம்.

இயக்குனர் ஞானவேல் ஒவ்வொரு காட்சியையும் அரசியலாக, அழகியலாக கோர்த்திருக்கிறார், திரைபடம் முழுமையாக அவரது கட்டுபாட்டில் உடும்புப்பிடியில் இருக்கிறது. அவரது எழுத்தில் திரைப்படத்தின் பல இடங்களில் அரங்கம் அதிரும் கைதட்டல்களுடன் பார்த்தேன், அப்படியான ஒரு தன்னெழிச்சியுடன் ஒரு பார்வையாளர் இருளில் கைதட்டும் கனங்கள் யாவும் இந்த முயற்சிக்கான விருதுகளாகவே கருதுகிறேன்.

"அண்ணே வலி தாங்க முடியலணே, பேசாம திருடுனோம்னு ஒத்துக்கிருவோம்ணே...!", அதற்கு ராஜாக்கண்ணுவின் பதில்: "தம்பி இந்த வலி காயம் ஒரு நாள் ஆறிப் போயிரும், ஆனா திருட்டுப்பட்டம் சாகுறவர கூட வரும். கொஞ்சம் பொறுத்துக்கடா."

"உங்களுக்கு சாதிச் சான்றிதழ் வேணுமாடா...? பாம்பு பிடிச்சுக் காட்டுவியா..?"

"பாம்பு பிடிக்க வேணாம்னுதான்யா சர்டிபிகேட் கேக்குறோம்.!"

"செங்கனின்னு யாராவது ஸ்டேஷன்ல இருக்காங்களா? " ( டிஜிபி )

ஐயா,ஒரு சின்ன என்கொயரி விசயமா....( காவல்துறை உதவி ஆய்வாலர் )

"செருப்பால அடிப்பேன்...இப்ப அந்த பொண்ணை போலீஸ் ஜீப்ல கொண்டுபோய் வீட்ல விடணும்.இல்ல எல்லோரையும் அரெஸ்ட் பண்ணுவேன்".

"இந்த சாதியில இருக்கவங்க, நெறையப் பேரு திருட்டு கேஸ்ல கன்விக்ட் ஆகுறது ரொம்ப சகஜம் சார்"

"திருடங்க இல்லாத சாதி இருக்கா நட்ராஜ்? ஒங்க சாதி, எஞ்சாதின்னு எல்லா சாதியிலயும் பெரிய பெரிய திருடங்க இருக்காங்க."

"இந்த கேச நான் தோத்தாலும் பரவாயில்லை, நான் போராடி தோத்தேன்னு பிள்ளைங்கிட்ட சொல்லிக் கிருவேன்"

என்றும் இனியும் ஏராளமாக வசனங்களை என்னால் தொகுக்க முடியும், நிச்சயம் இந்த திரைப்படத்தின் திரைக்கதை புத்தக வடிவம் பெறும் போது அது கல்லூரியில் சமூகவியல், சட்டம் பயிலும் மாணவர்களுக்கு பாடமாக வைக்கும் தகுதியுடைய நூலாக விளங்கும்.

வணீக சினிமா என்னும் சட்டகத்திற்குள் நின்று கொண்டும் இப்படியான அழுத்தமான படைப்புகளை கொடுக்கலாம் என்கிற காலம் தமிழில் பெரும் விடியலாக நிகழ்து வருவது மனதிற்கு பெரும் ஆறுதலாக உள்ளது.

ஒரு கலைபடைப்பு பார்பவரை தொந்தரவு செய்ய வேண்டும், பார்த்து முடியுங்கள் உங்கள் நித்திரை கலையும், ஏதாவது செய்ய வேண்டும் என்று உங்களுள் ஒரு வேகம் வந்தால் நடிகர் சூரியாவை சென்று பார்க்க வேண்டாம், வழக்கறிஞர் சந்துருவை சென்று சந்தியுங்கள். அவர் வழக்கறிஞர் மட்டும் அல்ல ஒரு எழுத்தாளர், தனது இளம் பருவத்தில் கவர்னர் மாளிகையில் சுவர் ஏறி குதித்து அங்கு போஸ்டர் ஒட்டியவர், அமெரிக்க தூதரகத்தின் வாயிலில் நின்று துண்டறிக்கை விநியோகித்தவர், அவர் உங்களுக்கு வழிகாட்டுவார்.

செங்கேனியாக நடித்த லிமா ஜோஸை பாராட்டினால் போதாது. உடன் கிளம்புங்கள், ராஜாக்கண்ணுவின் மனைவில் பார்வதி தனது 75வது வயதில் தற்போது முதனை கிராமத்தில் தான் வசித்து வருகிறார். அவரை சென்று சந்தியுங்கள், நம் காலத்தில் வாழும் பெரும் போராளி அவள்.

ராஜாக்கண்ணு வழக்கிறாக தொடர்ந்து குரல் கொடுத்து, நீதியை அடையும் வரை இதனை தன் வாழ்க்கை போராட்டமாகவே ஏற்றவர் கடலூரைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கோவிந்தன். அந்த வழக்கு முடியும் வரை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று தனது திருமணம் கூட தனது நேரத்தை கவனத்தை திசைதிருப்பி விடும், இந்த வழக்கில் நீதி பெறுவதே தான் ஏற்ற சவால் என வழக்குத் தீர்ப்பு வந்த பிறகு தான் திருமணம் செய்தார், கோவிந்தன் தோழர் திருமணம் செய்தபோது அவருக்கு வயது 39.

திரையில் வலியைச் சுமந்தபடி நடித்து காட்சிப்பத்தி அசல் இருளர் சமூக மனிதர்களே நம்மை அசைத்து நிலை குலையச் செய்தவர்கள் என்றால் மிகையில்லை. உங்கள் வீட்டை சுற்றிலும் ஏதாவது ஒரு திசையில் பயணம் செய்யுங்கள் நீங்கள் ஒரு நாடோடி குழுவை, இருளர்களை, குறவர்களை சந்திப்பீர்கள். உங்கள் வாழ்வில் அவர்கள் சார்ந்து உங்கள் மூளையில் ஏற்றப்பட்டுள்ள மதிப்பீடுகளை ரடெநயசெ செய்யுங்கள், புதிய மதிப்பீடுகளுடன் அவர்களுடன் தோல் கொடுத்து நில்லுங்கள்.

இந்த திரைப்படத்தை பார்க்கும் போது விசாரணை திரைப்படம் நினைவுக்கு வருகிறதா? சிறப்பு. ஆனால் சாத்தான்குளத்தில் நடத்த பென்னிக்ஸ், ஜெயராஜ் காவல் நிலைய கொலை சம்பவமும் உங்கள் நினைவுக்கு வந்தால் இன்னும் சிறப்பு. நம்மை சுற்றிலும் உள்ள காவல் நிலையங்களில் கொடூரமான அலறும் சத்தம் கேட்கிறதா உடன் திரைப்படத்தில் காட்டபடுவது போல மக்கள் கண்காணிப்பகம் PUCL போன்ற மனித உரிமை அமைப்புகளை தொடர்பு கொள்ளுங்கள்.

அறிவொளி இயக்கம் எழுத்தறிவை கற்பிக்க கிராமங்களுக்கு சென்றாலும் அவர்கள் எண்ணும் எழுத்தும் அவற்றுடன் கொஞ்சம் சுயமரியாதை, அரசியல் உரிமையின் விதைகளையும் சேர்த்தே விதைத்தது என்பதை ஜெய்பீம் காட்சிப்படுத்தியருக்கிறது. திரைப்படத்திலேயே இருளர் மக்கள் காவல்துறை அதிகாரிக்கு முன்னால் தங்கள் வாழ்வில் நடைபெற்ற கோர காட்சிகளை விவரிக்கும் இடம், ஒரு சமூகத்தின் மனசாட்சியை சிந்திக்கவைக்கும் ஒரு தருணமாக இருந்தது.

இந்தியாவில் பழங்குடி மக்கள் மீது நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்கள் தினசரி நிகழ்தவண்ணம் உள்ளது. தலித்துகளை பழங்குடியினரை ஒடுக்குவதற்கு பிறப்பிலேயே தங்களுக்கு உரிமை உள்ளது என்கிற மூடநம்பிக்கையுடன் இன்றும் உயர் சாதியினர், ஆதிக்க சாதியினர் வாழ்ந்து வருகிறார்கள்.

அதிகாரக் கட்டமைப்பு தன்னைச் சார்ந்தவர்களைப் பாதுகாக்க என்னவெல்லாம் செய்யும் என்பதை திரைப்படம் துள்ளியமாக காட்டுகிறது. ஆனால் குரலற்ற சாதியினர், குரலற்ற சிறுபான்மையினர், குரலற்ற ஏழைகளின் பக்கமே நிற்பது இன்றைய நம் கடமை, நம் கையில் உள்ள அரசியல் அமைப்பு சட்டம் நமக்கு பெரும் ஆயுதமாக உள்ளது, எந்த ஆயுதத்தையும் நாம் பயண்படுத்தவில்லை என்றால் அதில் துருவேறிவிடும், தூசி படிந்துவிடும், செயலற்று போய் விடும்.

ஓர் ஆவணப்படம் பார்ப்பதுபோன்ற உணர்வை ஏற்பட்டுவிடுமே என்கிற பயத்தை திரைக்கதையின் போக்கு வென்று ஒரு நல்ல கலைப்படைப்பின் தேர்ச்சியான தருணத்தை படம் எட்டியிருக்கிறது.

மதுரையில் கல் ஒட்டர்கள், குறவர்கள் என்கிற இரு சமூக மக்கள் இதே போல் காவல்துறையால் அவர்களால் முடிக்க வியலாத வழக்குகளை போடுவதற்கு என்றே பல தசாப்தங்களாக பாவிக்கப்பட்டார்கள். அவர்களுடன் பணியாற்றிய வகையில் இந்த கொடுமைகளை நான் நன்கு அறிவேன். சமீபத்திய கொரோனா நிவாரனங்கள் வழங்கும் போதும் அந்த சமூகங்களை சென்றடைந்தோம், இன்று மக்கள் கண்காணிப்பகத்தின் முயற்சியால் அவர்கள் விளிப்படைந்துள்ளனர்.

சினிமாவை தாண்டி இந்த படத்துடன் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே இது ஒரு வாழ்வனுவம், இதை பார்த்தவர்களுக்குமே இது வாழ்வின் ஒரு முக்கிய படம் அல்ல பாடம்.

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்



வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478



நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

Send Money to any Bank in Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# ஊழல் ரகசியக் காதல் விசாரணை

● **கோகுலன், சிட்னி**

நான் வாகாவிடம் பணத்தை வீசுவேன், அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்...நிறைய இருக்கிறது ” என்று கிளாடிஸ் பெரெஜிக்லியன், வாகா-வின் சட்டமன்ற உறுப்பினரும், அவரது அப்போதைய இரகசிய காதலருமான டேரில் மாக்வேரிடம் ஒரு தொலைபேசி உரையாடலில் கூறியிருக்கிறார்.

அது யாருடைய பணம்? நிச்சயமாக கிளாடிஸின் பணம் இல்லை. அது பொது மக்களின் வரிப்பணம். எத்தகைய அதிகார ஆணவம் இருந்திருக்குமேயானால், ஒரு மக்கள் பிரதிநிதியால் இப்படித் தைரியமாக உரையாடியிருக்க முடியும்.

வரலாறு காணாத வரட்சி, பின்னர் காட்டுத்தீயினால் ஏற்பட்ட பாதிப்பு, தற்போது கொரானா பாதிப்பு என பல இடர்பாடுகளுக்கு இடையில், ஒரு பெண் முதலமைச்சராக, கிளாடிஸ் சிறப்பான நிர்வாகத்தில் செயல்பட்டார் என்கிற வாதங்கள் அனைத்தும் தற்போது கேள்விக்குள்ளாகியிருக்கிறன.

அரசியலில் நேர்மை என்பது தகுதிப் பட்டியலில் கடைசி ஓரத்தில் ஒளிந்திருக்கும் ஒரு குறிப்பாக மாறியிருக்கிறதா? எல்லாத் தகுதிகளுக்கும் மேலாக அதிகார அடக்குமுறையை அதிகம் அங்கீகரிக்கிறார்களா? அல்லது ஒரு அரசாங்கம் மக்கள் பணத்தை எவ்வாறு செலவழிக்கிறது என்கிற குறைந்த பட்ச கேள்வியாவது கேட்கப் படுகிறதா?



### என்ன நடந்தது?

எளிய கதைச் சுருக்கம் இங்கே -

NSW வரலாற்றிலேயே மிகவும் பிரபலமான மற்றும் வலிமை வாய்ந்தவராகக் கருதப்பட்ட முதலமைச்சர் (பிரீமியர்), கிளாடிஸ் பெர்ஜிக்லியன் , முன்னாள் NSW சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட டேரில் மக்வேர் என்பவருடன் இருந்த தன்னுடைய இரகசிய காதலை வெளிப்படுத்தியதால், தற்போது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததோடு, அரசியல் வாழ்க்கையிலும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளார்.

NSW மாநிலத்தின் ஊழல் கண்காணிப்பு அமைப்பு (ICAC), தன்னிடம் விசாரணை நடத்துவதாக அறிவித்ததையடுத்து கிளாடிஸ் தனது இராஜினாமா முடிவை, கடந்த அக்டோபர் 1ஆம் நாள் அறிவித்தார். இந்நிகழ்வு, கொரானா நோய்க்கு எதிரான உச்சகட்ட போராட்டத்தில் மூழ்கியிருந்த NSW அரசியல் களத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.

கிளாடிஸின் இராஜினாமாவைத் தொடர்ந்து, துணை முதலமைச்சர் மற்றும் நேஷனல்ஸ் கட்சி தலைவர் ஜான் பாரலாராவும், மாநிலத்தின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆன்டிருவ் கான்ஸ்டன்சும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

இந்தப் பெரும் சலசலப்பிற்குப் பிறகு, லிபரல் கட்சி, புதிய பிரீமியராக, டாமினிக் பெரெடெடை நியமித்துள்ளது.

### யார் இந்த ICAC?

“ஊழலுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழு” என்றழைக்கப்படும், NSW மாநிலத்தின் ஊழல் கண்காணிப்புக் குழு, அரசு பொதுத் துறைகளின் செயல்பாடுகளை 1989 முதல் கண்காணித்து வருகிறது.

ICAC என்பது ஒரு நீதிமன்றம் அல்லாதபோதிலும் அதற்கென தனிப்பட்ட சில அதிகாரங்கள் உள்ளன. அதாவது, ஆவணங்களைக் கைப்பற்றுதல் மற்றும சோதனை செய்தல் என்பவை அவ்வதிகாரங்களில் அடங்குபவை.

ICACயினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய இயலாது. ஆனால் தனது சோதனைகளின் முடிவுகளை பரிந்துரைகளாக நீதித்துறைக்கு அனுப்பமுடியும்.

### யார் இந்த டேரில் மெக்வேர்?

இத்தனை களேபரங்களுக்கும் மையக் காரணம், டேரில் மெக்வேர் எனும் ஒரு நீண்ட கால அரசியல்வாதி. கடந்த 2018 ஆம் ஆண்டு, ஊழல் குற்றஞ்சாட்டப்பட்டு அரசியலில் இருந்து விலகிக் கொண்டார்.

வேறொரு ICAC விசாரணையில், கட்டடங்கள் தொடர்பான அரசியல் பேரத்தில் பணம் பெற்றதாக ஒப்புக் கொண்டவர்.

அதுமட்டுமல்லாமல், சீனத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் கமிஷன் என பல வித ஊழல்களில் ஈடுபட்டிருக்கிறார்.

### ஏன் பிரீமியர் இந்த விசாரணையில் ஈடுபடித்தப்பட்டிருக்கிறார்?

கடந்த 2020-ஆம் ஆண்டு நடந்த ஊழல் தொடர்பான விசாரணையில், பிரீமியர் ICAC இல் சாட்சியம் அளித்தார் மற்றும் அவர் மகுவேருடன் ஐந்தாண்டு இரகசிய உறவில் இருந்ததையும் வெளிப்படுத்தினார்.

தன் நெருங்கிய நண்பர்களுக்கோ அல்லது குடும்பத்தினருக்கோ கூட இந்த உறவைப் பற்றி தெரியாது என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

தான் எந்த தவறும் செய்யவில்லை என்றும், சுமார் ஒரு மாதத்திற்கு (அக்டோபர் 2020) முன்பு, அவர்களின் இரகசிய உறவு முடிவுக்கு வந்த விட்டது மற்றும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையின் ஒரு பகுதி என்றும் கூறியுள்ளார்.

கடந்த வாரம், 10 இற்கும் மேற்பட்ட தொலைபேசி உரையாடல்களை, ICAC விசாரணையில் ஒலிபரப்பப்பட்டன. மேலும், பல முக்கிய முன்னாள் மற்றும் இந்நாள் அரசியல்வாதிகள் சாட்சியங்களாக விசாரிக்கப்பட்டனர்.

### அடுத்து என்ன நடக்கும்?

பிரீமியர் மீதான ICAC விசாரணையின் விளைவு எதுவாக இருந்தாலும், இது போன்ற விசாரணைகள் பொது மக்களுக்கும் அவர்களின் வரிப்பணத்திற்கும் எத்தகைய நன்மையையும் நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது என்பது நமக்கு நன்றாகவே புலப்படுகிறது.

அதிலும் குறிப்பாக, அரசியல்வாதிகள் நமது பணத்தைச் செலவழிக்கும் விதம் மற்றும் அவர்கள் எந்த நோக்கங்களுக்காகச் செலவிடுகிறார்கள் என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதில் ICAC ஒரு முக்கிய சேவையைச் செய்துள்ளது.

மேலும், ஆஸ்திரேலிய நாட்டின் அரசியல் அதிகாரக் கலாச்சாரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. அரசியல்வாதிகள், தங்கள் கட்சிக்கு வாக்கு வாங்குவதற்காகவும், தங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தவும், மக்கள் வரிப்பணம் செலவழிக்கப்பட்டால் எந்தத் தவறும் இல்லை என்கிற சீரழிந்த மனநிலையையும் இங்கே காண-முடிகிறது. இது ஒரு பொதுநிதியின் தவறான பயன்பாடு என்பதை கிளாடிஸ் உணர்ந்தது போல் தெரியவில்லை. ஏனென்றால், இத்தகைய செயல்பாடுகளை வாடிக்கையான ஒன்று எனச் சொல்லியிருக்கிறார்.

### அரசியல்வாதிகளை நம்ப முடியுமா?

அரசியல்வாதிகள், ஊழல் மற்றும் நடத்தை பற்றிய கேள்விகளைத் திசை திருப்புவதில் வல்லுநர்கள் ஆகியிருக்கின்றனர்.

நாடாளுமன்றங்களும், மாநில மன்றங்களும், மக்கள் பணம் செலவழிப்பது பற்றிய கணக்குகளை முழுமையாக ஆராய்வதில்லை. தற்பெருமை பேசிவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றன.

அதனால்தான், ICAC போன்ற சுயாதீன அமைப்புகளின் பணி, நமது ஜனநாயகத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மற்றும் அதே காரணங்களுக்காகத்தான் நமக்கு ஒரு தேசிய அளவிலான ஊழல் கண்காணிப்பு ஆணையம் தேவைப் படுகிறது என்பதையும் நாம் உணர வேண்டும்.

கிளாடிஸ் மீதான பொது விசாரணையில், நமது பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பது குறித்த உண்மையைப் பார்க்கத் தொடங்கினோம். எனவே ICAC போன்ற அமைப்புகள் நமக்கு உண்மையைப் பார்க்கவும், கேட்கவும், இறுதியில் புரிந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.


VIJITHA TEXTILES
விஜிதா புடவை மாளிகை
அனைத்து
வயதினருக்குமான
ஆடை
அணிகலன்களையும்
மலிவான விலையில்
நீங்கள் எம்மிடமிருந்து
எப்போதும்
பெற்றுக்கொள்ள
முடியும்
மலிவு விலை!!!
639 IPSWICH ROAD,
ANNERLEY QLD.
0470 295 383

ஊழிக்காலம்-2

28



# புயலுக்குப்பின்...

அவளுடைய மனம் குமுறியது. அழுதாள். உண்மையிலேயே நரம்புத்தளர்ச்சி ஒரு மன அழுத்தம் அவளைப் பீடித்திருந்தது. காரணமற்ற கோபமும், தாழ்வுணர்ச்சியும் தனிமையுணர்வு, தூக்கமின்மை வாய்விட்டுக் கத்தவேண்டுமென்ற உணர்வு இல்லையேல் அழவேண்டும்போல ஒரு அதிர்வு மாறிமாறி அவளை அலைக்கழித்தது. யாரைத்தான் சரணடைவது என்றில்லாமல் எல்லா தேவதைகளையும் சரணடைந்தாள். புதிதாக யாரோ கொடுத்த அம்மா பகவானின் படத்தைவைத்து வழிபாட்டாள். படத்திலேயே ஜெபம்போல வாக்கியங்கள் எழுதியிருந்தன. அதை அப்பால் வைத்து விட்டு சாயிபாபாவை எடுத்து முன்னே வைத்து அதை பாராயணம் செய்தாள். எத்தனை செய்தும் மனம் சாந்தியடைய மறுத்தது.

மாலை மூன்று மணி. குளிப்பதற்கு ஆயத்தம் செய்தாள் பார்வதி. அப்போது இராணுவப் பெண்கள் அணியொன்று வந்தது. அவள் எதையும் பொருட்படுத்தாது முழுகிவிட்டு வந்து ஆடைகளை அணிய,

"அம்மா உங்களுக்கு விசிட்டர்ஸ் வந்திருக்கினம். கெதியா வாங்க என்றழைத்தாள் ஒருத்தி.

ஆச்சரியம் ,ஆனால் உண்மை. போய் சீட்டை வாங்கிப் பார்த்தாள். வந்தவர் யாரெனப்போடவில்லை. அவள் எழுதி வைத்த கடிதங்களை எடுத்துக் கொண்டு போனாள்.

துர்க்கா அவளுடைய பேத்தி வந்திருந்தாள். கணவன், பிள்ளைகள் அவளுடைய மைத்துனர் குடும்பம் என எல்லோரும் வந்திருந்தனர். மகிழ்ச்சியாக உரையாடினோம் என்றாலும் நேரம், பார்வையாளர் நேரம் முடியும் தருணம் ஆக ஒரு ஐந்து நிமிடமே பேசக்கிடைத்தது. அன்பும் திருப்தியுமாக விடை பெற்றனர்.

மாலை வந்து சேர 'மறுபடி லைனாம் வாங்க" என்றார்கள். வந்திருந்த பெண்கள் அணியில் லேடி சார்ஜனும் அவளுடைய குழுவினரும் கத்திக்கத்தி பெண்களை லைனுக்கு கூப்பிட்டு, லைன் பண்ண வைத்து எண்ணிக் கணக்கெடுத்து முடிந்த போது மாலை ஆறுமணி..

அதன்பின் பார்வதி தன் பிரதோச விரதத்துக்கான சமையலை செய்ய ஆரம்பித்தாள். ஒருகறி ஒரு சோறு இவ்வளவுதான் செய்து முடிய ஒரு பெண் ஓடிவந்து,

'ஏ' புளொக்கில சண்டை என்றாள்.

"என்ன என்ன?" என்றபடி பலர் கூடினர்.

" அந்த லூசுப் பெட்டை விஜியை 'ஏன் இன்னும் லைனுக்கு வரேல்லயெண்டு லேடி சார்ஜன் ஏச, அவளும் திருப்பி பேச, இவள் அவளை அடிக்க, அவளுந் திருப்பி அடிக்க, மேரி மறிக்க மேரிக்கும் அடி. மேரி மயங்கீட்டாள். ஆமிப் பெட்டையள் பிடிக்கப் போய், அவைக்கும் அடி, எங்கட சார்ஜனும் போயிருக்கிறான். எல்லாரையும் அவள் ஒருத்தியே சுழன்று அடிச்சாள் பாக்கோணுமே" அவள் விபரிக்க விபரிக்க, அபிப்பாராயங்கள் வந்தன.

"விசர்ப் பெட்டையெண்டு தெரியும் பேந்தேன் முண்டினவை"

"அய்யோ அது பம்பமடுவிலயே அப்பிடித்தான்"

"சரியான மொறாலப்பா ஒருத்தருக்கும் பயப்பிடாது."

"எல்லாஞ்சரி இனி இதைவச்சு எல்லாரையும் பழிவாங்குகினமோ தெரியாது"

"இது நல்ல கதைதான் எங்கயோ நடந்ததுக்கு நாங்களே பொறுப்பு"

பார்வதி கதையிலிருந்து விலகினாள். தன் குடிலுக்குள் போய் சாப்பிட உட்கார்ந்தாள். சோற்றை தட்டில் வைக்க,

'அம்மா" என்றழைப்பது கேட்டது. 'சரிதான்' என அவள் தாமதிக்க,

"நீங்க சாப்பிடுங்க அது வேற யாரையோ?"என்றாள் மதி. மதிக்கும் உணவைப் பரிமாறி விட்டு தானும் சாப்பிட்டாள்.

சாப்பிட்டுவிட்டு தட்டுக்கழுவ வெளியே வர, முகப்பில் குவியலாகப் பிள்ளைகள் நிற்பது தெரிந்தது.

"என்ன, திரும்ப என்ன?"

"இல்லை சார்ஜன் வந்திருக்கிறார், ஏதோ கதைக்கிறார். அந்தாளுக்கும் அடியாம்.. அவர் கிட்டவரப் பயப்படுறார். பிள்ளையள தள்ளி நிக்கட்டாம்'

ஆனாலும் அவரைச்சுற்றி வளைத்து அதிகம் பிள்ளைகள் நின்றார்கள். அவர் ஆக்ரோசமாக தமது பக்க நியாயத்தை சொல்லிக் கொண்டிருந்தார்.

இரண்டு புளக்கிற்கும் இடையே இருந்த காணியில் ஒரு குழாய்க்கிணறு இருந்தது. அதில் இரண்டு தரப்பு பிள்ளைகளும் குடிநீர் எடுப்பது வழக்கம்.

"இப்போ அந்த புளொக் பிள்ளை இப்படி நடந்து கொண்டதால் அவர்களுக்கு தண்ணீர் அடிக்க விடமாட்டோம் நீங்க என்ன சொல்லுறீங்க" என்றார்.

மாலா முன்வந்து குடி தண்ணீர் அந்தக்கிணறுதான். அதை மறிச்சா எப்பிடி? பவுசர் தண்ணியில குளோரின்கூட, எல்லாருக்கும் அந்த தண்ணிதான் குடிக்க தண்ணிய மறிக்கேலாது." என்றாள்.

"சரி ஆறுமணிக்கு முதல் எடுக்க வேணும்"

"ஓமோம் அது காணும்."என்றார். ரோசி,

"சேர் அந்தப்பிள்ளையளும் பாவம். காலையில அவை எடுக்கட்டும். பின்நேரம் நாங்கள் எடுக்கிறம்."

" ஓ, நீங்க வேற, நாங்க வேற இல்லை நல்லா இருக்கோணும்தானே, எம்மேல கோபமா?" என்றான். மிக வருத்தத்துடன் தன் உரையை முடித்துவிட்டுப் புறப்பட்டுப்போனான்.

இப்ப யசிந்தா தான் நேரில் சம்பவத்தில் கண்ட காட்சியை விபரித்தாள்.

"எடியே அது விசர், இண்டைக்கு பூரணைவேற, கொஞ்சம் உச்சத்திலதான் நிற்கும். அது தெரியாம தனகிப்போட்டு வாங்கி முடிச்சினம்."

"எடி உதையும் ஒருத்தர் இயக்கத்து எடுத்து விட்டிருக்கினம்தானே"

"ஆர் சொன்னது அவள் இயக்கமெண்டு. அவள் வெற்றிமனையில் வைச்சிருந்த மன நோயாளிதான். ஆனைவிழுந்தான் பிள்ளை பெற்றாரால கைவிடப்பட்டு தெருவில திரிய, ஊரில ஆரும் ஆம்பிளையள் பயன்படுத்திப் போடுவாங்களெண்டு, நாங்கள்தான் மனநோயாளர் இல்லத்தில சேர்த்தம், இவள் மட்டுமில்ல இன்னுமொரு பிள்ளை. அவள் இப்ப ஓருமாதிரி நல்லா இருக்கிறாள். இவள் இன்னும் திருந்தேல்ல. ஒருத்தி இவளபேரை அடிக்கிறதெண்டா, அந்த மூர்க்கம் சாதாரண ஆளுக்கு வருமே."

"அப்பயேன் இவளை இஞ்ச கொணந்தவங்கள்."

"அதுசரி மனநோயாளர் விடுதியில இருந்த மற்றாக்கள் எங்க" பார்வதி அறியும் ஆவலில் கேட்டாள்.

"வெள்ளை முள்ளிவாய்க்காலில இவையளுக்கெண்டு பெரிய பங்கரடிச்சு வைச்சிருந்தநாங்கள்.ஒரு மல்ரிபெரல் செல்லடிக்கயுக்க அந்த முகாம் பொறுப்பாளர் பவானி, அவளின்ர சின்ன குழந்தைகள் இரண்டு, மஞ்சு, இவயளோட இன்னும் நாப்பத்திரண்டு பேர். செல்லடி துவங்க எல்லாரும் பங்கருக்க போக நானும் ஜெயமலரும் ஓடிவரமுதல், செல்விழ நாங்கள் அதில நிண்ட உழவூர்திக்குக்கீழ பதுங்கினம். ரெண்டு செல் ஒண்டுக்குப்பின்னால ஒண்டா., அந்த பங்கருக்கு மேலயே விழுந்திட்டுது. ஒருவரும் மிச்சமில்லை வெளிவாசலுக்கால

பத்துப்பேருக்குகிட்ட தப்பியோடினவை. அதில இவள் ஒருத்தி. மற்றதுகளுக்கு என்ன நடந்துதோ தெரியாது" 'ஆர்கண்ட, அணிவகுப்பில நிண்டு ராஜீவ்காந்திய துவக்கால அடிச்சவனுக்கு சித்தப்பிரமை எண்டு சாதித்த இலங்கை அரசு, சித்தப்பிரமை பிடிச்சவளை புலியெண்டு கொண்டுவந்து அடிவாங்க வேணுமா? எல்லாந்நேரந்தான்."

மறுநாள் காலையில் பண்ணை வளர்ப்பாளர்கள் வந்து எல்லோரையும் சாய்த்து லைனில் விட்டு எண்ணிக் கணக்கெடுத்தபின் போனார்கள். போய் ஒரு கொஞ்ச நேரத்திலேயே சார்ஜனும் மேஜரும் வந்து, கோவிலடியைத் துப்பரவு செய்ய இருபதுபேர் வாங்க" என்றார்கள்.

யாராவது அசைய வேண்டுமே, ஊகும். அவளவள் தன்பாடு. பெரும் பாடுபட்ட முப்பதுபேரை வேலைக்கென அனுப்பினாள் லீடர். பதினேழு பேர் வேலை செய்ய மற்றவர்கள் மறைந்து போனார்கள்.

கிறீஸ்தவப்பிள்ளைகளை 'வாருங்கள்' என ஓலமிட்டாள் யசிந்தா. அவர்கள் தங்கள் பிரார்த்னைக்கு இடம் துப்பரவு செய்தார்கள். இந்துசமயத்துப்பிள்ளைகள் கோவிலடியை துப்பரவு செய்தார்கள்.

மாலையில் பார்வதியை அழைத்த சார்ஜன், ஒரு பெரிய தொலைக்காட்சிப் பெட்டியை காட்டி ,

"இதை ஒங்கட முகாமுக்கு கொண்டு போங்க" என்றான். பார்வதியுடன் வந்த நான்கு பிள்ளைகள் அதை தூக்க, கூடவே ஒருவன் அதை செற்பண்ணி பூட்ட வந்தான். அந்த தொலைக்காட்சிப் பெட்டியுடன் ஒரு சுலோகமட்டை இருந்தது. அதில்,

"இந்த தொலைக்காட்சிப் பெட்டியானது உங்களுக்காக இராணுவத்தினர் தமது சம்பளப்பணத்தில் வாங்கி நட்புடன் அன்பளிப்பாக வழங்குகிறார்கள்." என எழுதப்பட்டிருந்தது.

"அடியாத்தை அப்ப நாங்களும் எங்கட மக்களும் கோடிக்கணக்கான சொத்துகளை சுதந்திரபுரத்திலயிருந்து வட்டுவாகல்வரைக்கும் போட்டிட்டு வந்தது எந்தப்பட்டியல்ல சேரும்"

"அது அகில உலக யுத்த நடைமுறையில சேரும்."

என்னதான் செற்பண்ண வந்தாலும் அது வேலை செய்யவில்லை. காரணம் அதற்கான ரோல்பிளக், பற்றறி, றிமோட் எதுவும் இல்லை. அவற்றை நீங்கள்தான் வாங்கவேண்டும் என்றார்கள்.

மாலையில் சார்ஜன் வந்து "கோவிலுக்கு ஞாயித்துக்கிழமை பொங்கல் வைக்கவேணும் என்ன என்ன சாமான் வாங்க வேணும்" பார்வதியுடன் இன்னும் இருவர் கூடி பொங்கலுக்கான பொருட்களை பட்டியல்போட முனைந்தனர். பொறுமையை இழந்த சார்ஜன் ,

"நீங்க வாங்க வந்து வாங்குங்க" என்றான்.

"காசு?"

"நீங்க கலெக்சன் போட்டு எடுங்க" என்றான்.

'அடி சக்கை நாங்களா பொங்கல்கேட்டம் அதுகும் ஞாயிற்றுக்கிழமை.' புார்வதி வெளியே சொல்லவில்லை.

அடுப்படியில் அன்றாடம் கோழியும், மீனும் அவிக்கும் பாத்திரத்தில் பொங்கல் வைக்கத்திட்டமிட்டான் அவன்.

"தேங்காய், தேங்காயெண்ணை, பயறு, பச்சையரிசி, சீனி என்பன ஸ்ரோரில எடுக்கலாம். என்றான்.

பார்வதி உதயாவையும் கானகியையும் வீடுவீடாகச் சென்று பூசைக்காக காசு திரட்டச்சொன்னாள். தேவையான பொருட்களை பட்டியலிட்டாள். சுமார் எட்டாயிரம் ரூபாவரை பட்டியல் வந்தது. ஐயாரத்து அறுநூறு மட்டுமே சேர்ந்தது. சேர்ந்த பணத்துக்கேற்ப பொருட்களை குறைத்து பூசைக்கு ஒழுங்கு செய்தாள்.




CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


RAVANAS BLINDS, CURTAIN SHUTTERS DOORS & WINDOWS
Free Measure & Quotes • Delivery & Install • Servicing All Suburbs
Our Services:
Blind Curtains | Plantation Shutter | Roller Shutters | Security Doors | Fly Screens | Outdoor Blinds
Aluminium Doors & Windows | Alfresco Glass Cover | Shower Screens | Mirrors | Wardrobe Doors
Contact: Raja (Roger) 0411 734 484 | 1300 572 540
Ravanas Group Pty Ltd 31/283 Rex Road, Campbellfield VIC 3061
Email : roger@ravanas.com.au
Web: www.ravanas.com.au


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Digital TV Antenna
Ducted Vacuum
Solar CCTV
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO

# Covid க்கு முடியாது கிறிஸ்மஸ்ஸையோ Transco வையோ நிறுத்துவதற்கு....




Christmas Shipping Schecdule

| CUT OFF | EST ARIVAL IN SL | CUT OFF | EST ARIVAL IN SL |
|---|---|---|---|
| September 04 | Oct 12 | September 18 | Oct 26 |
| September 11 | Oct 19 * | September 25 | Nov 02 |
| October 02 | Nov 09 | October 23 | Nov 30 * |
| October 09 | Nov 16 * | October 30 | Dec 07 * |
| October 19 | Nov 23 | | |
| November 01 | Dec 14 | November 05 | Dec 28 |
| November 08 | Dec 21 * | November 27 | Jan 04 * |
| December 04 | Jan 11 | December 18 | Jan 25 |
| December 11 | Jan 18 * | | |
| 2022 | | | |
| January 08 | Feb 15 * | January 22 | Mar 01 * |
| January 15 | Feb 22 | | |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices

WE ARE DOING BUSINESS AS USUAL



Shop online in Australia
have it delivered to Sri Lanka
transcoshopping.lk

Transco Shopping

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU